www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ மக்களின் முற்போக்கு அரசியல் இதழ்.

30 NOV 1989




## எல்லைப் புறத்து கிராமம்

அன்பான நகர்புறத்து கொரில்லாவே !
என் வந்தனங்கள் உனக்கு :
அடுத்த வெடிகுண்டு தாக்குதலுக்குத்
தயாராவதற்கு இடையில்
ரைஃபிளை துடைத்தல்
வெடிமருந்தை சரி பார்த்தல்
திருடர்களுக்கும் கொள்ளைகாரர்களுக்கும்
மரண தண்டனை வழங்கல் என
உனக்கு நூறு வேலைகள்
இருக்கும் தான்
என்றாலும்
தயவு செய் !
மூன்று நிமிடந்தான்
சொல்வதை கேள் எனத்
தாழ்மையாய் வேண்டினேன் :

நமது நிலத்தின் எல்லைப் புறங்களில்
கொஞ்சக் காலம் திரிய நேர்ந்தது
கிழக்கு மாகாணத்தில்
அந்நியன் கணைக்கு எந்த நேரமும்
நெருங்கக் கூடிய
நீண்டதோர் எல்லை : அனைவரும்
அறிவர் !

இருபது மைல்கள் காட்டினுள் நடக்கையில்
விட்டும் தொட்டும்
குளிர்ந்தும் கொதித்தும்
இடையிடை குறுக்கிடும்
அருவியில் குளித்து
தரையிலே பூத்த தாமரைகளில்

வெளியீடு : தேசபக்த முன்னணியினர் கழகம், மக்கள் கலை அச்சகம், தமிழீழம்- அன்பளிப்பு ரூ-2.00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழி ஒதுங்கி
சூரியனுக்கு நேர்கீழே இருக்கிறோம்
என்பதான பிரமையில்
வழியில்
'புலி பாய்ந்த கல்' என்ற இடம்
(பெயர் உனக்கு பிடிக்கிறது இல்லையா?)
அதற்கு வலப்புறமாய்
போகிறது ஆறு:
அது போகட்டும் அப்புறமாய்
என்றபடி
நாங்கள் நடந்தோம் இப்புறமாக
எல்லைபுறத்து கிராமம்,
மதுறு ஒயாவிற்கு இப்புறமாக
நமது நிலமும்
அப்புறமாக அவர்களது நிலமும்
பச்சையாய் விரிந்தது.

ஆறு
மணலென உறைந்துள்ள நாட்களில்
இப்புறமாக முயல்களை வேட்டையாட
அவர்கள் வருவராம்
உரத்த குரலில் எருமையை விரட்டும்
அவர்கள் குரலும் இங்கே கேட்குமாம்
ஒருபுறம் காடு : யானைகள் திரியும்
மறுபுறம் குன்றுகள் :
இடையிலே நீர்நிலை
தொலைவில் கூட்டமாய்
அரசாங்கத்தால் அத்துமீறிக்
குடியேற்றப்பட்டோர் குடிசைகள் தெரியும்

கியூபாவில் தான் உள்ளனர் என்று
நீ சத்தியமாக நம்பியிருந்த
'உழவர்கள்'
இங்கும் கூட உள்ளனர் நண்பா !
நிலமும் நிலத்துடன் இணைந்த மனிதனும்
பத்திரிக்கைகளை இவர்கள் அறியார்,
பாடசாலைகளையும் இவர்கள் அறியார்

டீ.வீ வீடியோ மின்சார வசதிகள்
இலத்திரன் கருவிகள் எதுவுமே அறியார்
இலங்கை அரசின் வானொலி தரும்
செய்தியை மட்டுமே கேட்டு பழகி
உன்னைக்கூட
'பயங்கரவாதி' யாய்த்தான்
இவர்கள் அறிவார் !
எப்படி இது ?

காக்கி அணிந்த அரக்கர் கையில்
வதைபடும் மக்களை காப்பதற்காக
துப்பாக்கி உயர்த்த யார் முன்வருகிறார் ?
எல்லைப்புறங்களில் மக்களை காப்பது
யாருடைய பணி ?
சுத்தி சுத்தி சுப்பற்றை கொல்லைக்குள்
எத்தனை நாள்தான்
குண்டு வெடிப்பும் கொரில்லா தாக்கும் ?

சும்மா போ நீ முட்டாள் கவிஞனே
கேள்வி கேட்க இதுவா நேரம்..........
என்று
நின்று பதில்தர சிரமப்பட்டு
அடுத்த குண்டுதாக்குதலுக்கு
ஓடுவாயானால்
அதற்கடுத்த வெடிகுண்டு தாக்குதலுக்கு
தயாராவதற்கிடையில்
மறுபடி இதனை நான் சொல்ல நேரும்.

சேரன்



www.tamilarangam.net

# தேசபக்த முன்னணியினர் கழகம் - தமிழீழம் - இதழ் - ௨

"எமது நாட்டில் நேரம் பிணங்களின் எண்ணிக்கையை கொண்டுதான் கணக்கிடப்படுகின்றது..... இப்போது நேரம் 12 மணியாக இருந்து மரணங்கள் உடனான.... இப்போது நேரம் காலை 7 மணியாகிவிட்டது 35 பிணங்கள்"

"இரவு காலங்கள் இரையும், தெருவெங்கள் கூடவும், சத்தம் கேட்டு விழித்த மக்கள் இன்று துப்பாக்கிகளின் வெடிச்சத்தம் கேட்டு விழிக்கின்றனர்"

வாழ்வில் அருணம் பார்த்தவர்கள் அன்று வீட்டுக்கு வெளியே செல்லும் போது

வாசலில் பிணங்களைப் பார்க்கின்றனர் இன்று

எமது தேசத்தில் இன்று நடக்கும் உண்மைகள், யதார்த்தங்கள் எமது மக்களின் அன்றாட வாழ்வில் எப்படி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மேலேயுள்ள கோரங்கள் மிகவும் வேதனையுடன் ஆழமாக சித்தரிக்கின்றது. இந்திய, இலங்கை அரசபடைகளின் துப்பாக்கிகள் ஒரு புறம் அதிகாரப் போட்டியில் மக்களை விரோதிகளாக்கிவிட்ட இயக்கங்களும் அன்னியரின் வழிகாட்டுதலையும் ... -கங்களின் விடுதலை? துப்பாக்கிகள்? மறுபுறம் இவற்றின் நடுவே தேசத்தவர்களின் ... இன்று விடிவுக்காக எத்தனையோ துன்பங்களை தாங்கியிருந்த மக்கள் இன்று விடிவுக்காக ... இருந்துவரும் நண்பர்களைப் பார்த்து அரக்கர்களின் ஆயுத முனையில் இருந்துவரும் நண்பர்களைப் பார்த்து துர்ப்பாக்கியமாக தமது வாழ்நாளை எண்ணுகின்றனர்.

மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள் மக்களை மேலும் மேலும் கிளர்ந்து எழச்செய்யும் என்பதுதான் நியதி. அது நமது மண்ணுக்கும் பொருந்தும் பொய்த்துவிடவில்லை. ஆகவே தான் நியாயங்களையும் உரிமைகளையும் தட்டிக் கேட்கின்ற ஒவ்வொருவனுக்கும் அவன் பேசிய வார்த்தைகளின் எண்ணிக்கையில், பதிலுக்கு துப்பாக்கி ரவைகளைத் தந்து சாகடித்துக் கொண்டிருக்கும் ஆயுத வெறியர்களின் அட்டகாசங்களுக்கு மத்தியில் வெறும் வாய் வார்த்தைகளாக ஏட்டில் அல்ல ரோட்டில் வெகுஜனப் போராட்டங்களை நடத்தும் தமிழீழ மாணவர் சமூகத்தின் போராட்ட வீரங்கள் -தான் இவை.

எதிரியின் அடக்குமுறைகள் உச்சக்கட்டத்தை அடைகின்ற போது, சுவாசிப்பதற்கு சுதந்திரக் காற்றே இல்லை என்ற நிலையில், வாழ வேண்டும் போது, மக்கள் சமூகத்தின் ஒவ்வொரு -வரும் போராடியே தீர வேண்டும் என்கின்ற போது மக்கள் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவும் திசைக்குத் தெரிந்த முறையில் தன்னெழுச்சிப் போராட்டங்களில் இறங்கியுள்ளது.

மக்கள் பிரிவினரின் போராட்டங்களை எதிரிக்கெதிராக தீர்மான -கரமான பாதையில் முன்னெடுத்துச் செல்லவும், விடுதலை காத்தான் எந்த அணியினரின் காலங்களும் ஊடுருவ விடாது நிறுத்தி புரட்சிப் போராட்டத்தை தொடர வேண்டுமானால் ஒரு புரட்சிகர இயக்கம் மக்கள் மத்தியில் இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மறுபக்கம்---

www.tamilarangam.net

உழைக்கும் மக்கள் தலைமையிலான புரட்சிகர தமிழீழ தேசிய விடுதலை இயக்கம் ஒன்றை கட்டியமைப்பதில் ஈடுபட்டுள்ள தோழமை சக்திகளே! தமிழீழ சமூகத்தின் அரசியல், இராணுவ நிலைமைகளைப் பற்றியும் உடனடி அரசியல் பணிகள் குறித்தும் புரட்சிகர இயக்கத்தை கட்டுவது தொடர்பாகவும் நாம் ஒவ்வொருவரும் கருத்துகளைக் கொண்டு அதன் அடிப்படையில் இயங்கிவருகின்றோம் என்பது தெளிவு. நமக்கு இடையில் பல விடயங்களில் உடன்பாடான அரசியல் பார்வைகளும் செயல்பாடுகளும் இருப்பது போல் சில விடயங்களில் முரண்பாடான அரசியல் பார்வைகளும் செயற்பாடுகளும் இருப்பது கண்கூடு. நமக்குள்ளே பலர் இந்தப் பிரச்சனைகளின் யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொள்ளாமல் குழம்பிப் போய்க் கொண்டு இருக்கின்றனர்.

புரட்சிகர சக்திகளுக்கு இடையிலான ஐக்கியத்தின் அவசியத்தை ஒவ்வொரு பகுதியும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு நெருக்கடிகளையும் தாண்டி இருக்கும் தேசபக்த சக்திகளின் பலத்தை ஒன்றுபடுத்துவதை நமது பிரதான பணியாகக் கொள்ள வேண்டும். நமக்குள்ளேயே இருக்கின்ற மக்களுக்காக, புரட்சிகர மாற்றத்துக்காக உண்மையாக உழைக்கும் சக்திகள் முன்னேறி வருகிறார்கள். இவர்களது தோழமையான போக்கினை வெளியில் நமக்கு இடையிலான முரண்பாடான அரசியல் கொள்கைகளை நாட்டியே காலம் கடத்துவதை விட்டு விட்டு நமக்கிடையேயான உடன்பாடான அரசியல் பொது வேலைகளில் ஒரு கூட்டு வேலை முறையை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தமிழீழத்தில் புரட்சிகர சக்திகளின் பலத்தைப் பெருக்குவோம்.

ஐக்கியப்படுவது என்ற கொள்கையை ஒரு அபிலாசையாக மாற்றாது நிஜ நடைமுறையாக மாற்றுவோம்.

ஆசிரியர் குழு.

---

சீனாவில் போரிடுவதா, போரிடாமல் இருப்பதா என்று இருந்த பிரச்சனை இன்று யுத்தமா சமாதானமா என்ற பிரச்சனையாகிவிட்டது. ஆயினும் ஆரம்பத்தில் அது முனைப்படையாமல் போயுள்ளது; அது எல்லாப் பிரச்சனைகளிலும் மிக முக்கியமானதும் அடிப்படையானதுமான பிரச்சனையாகவுள்ளது. இன்றைய சரணடையத் தூண்டும் கொள்கையை யப்பான் தீவிரமாக மேற்கொண்டதாலும் சர்வதேசியச் சரணாகதிவாதிகள் தமது செயல்களைத் தீவிரப்படுத்தியதனாலும் பிரதானமாக, எமது ஜப்பானிய-எதிர்ப்பு முன்னணியில் உள்ள ஒரு பகுதியினர் முன்பைவிட உறுதியற்றதாகவும் இருப்பதனால் யுத்தமா சமாதானமா என்ற பிரச்சனையைப் பொறுத்து பெரும் கொந்தளிப்பு கிளம்பியுள்ளது. இங்கேயே சரணடைதல் தற்போதைய அரசியல் நிலைமையின் முக்கியமான அபாயமாகியுள்ளது. இந்த சூழ்நிலையில் எங்குமுள்ள சீன தேசாபிமானக் கட்சிகளும் குழுக்களும் சீனநாட்டவர்களும் அரசியல் போக்குகளின் செயல்களைக் கண்காணிக்கவும். சரணடைதல் பிரதான அபாயம், கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்ப்பது சரண் அடைவதற்கான தயாரிப்பு என்ற இன்றைய நிலைமையின் நிதர்சனத்தை உணர்ந்து கொள்ளவும் நம்மாலியன்றதைச் செய்து சரணடைதலை எதிர்க்க வேண்டும். [illegible] சரியாக இரண்டு ஆண்டுகளாக இரத்தம் சிந்தி நடத்துகின்ற ஜப்பானுக்கெதிரான யுத்தத்தின் வெற்றிகளை நிலைகுலைக்கவோ துரோகம் செய்யவோ எப்பகுதியினரையும் அனுமதிக்கக்கூடாது! தொடர்ந்து போராடி ஐக்கியத்தில் ஊன்றி நிற்பதன் மூலம் தான் சீனா உயிர் வாழும். நாட்டிலுள்ள அனைத்து தேசாபிமானக் கட்சிகளும் குழுக்களும், தேசபக்தர்கள் அனைவரும் ஐக்கியமாகத் தொடர்ந்து போராடி ஐக்கியத்தில் ஊன்றி நிற்போம்.

— சரணடைவு செயலை எதிர்த்துப் போரிடு.
தோழர் மாவோ.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ தேசிய விடுதலைப் போர்

## மக்களின் யுத்தத்தை நோக்கி....

தமிழ் ஈழ மக்களின் தேசிய விடுதலை போராட்டம் எங்கெங்கெல்லாம் செல்லக் கூடாதோ – தேவையில்லையோ அங்கெல்லாம் சென்று தேசியவிடுதலை போரின் ஒரு சீரான திசை வழியில் இருந்து விலகி பல்வேறு அன்னிய ஆதிக்க சக்திகளின் அரசியல் கூறுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது. இதன் விளைவு தேசத்தின் அன்றாட நடவடிக்கைகளில் கண் மூடித்தனமான தனி நபர் விரோத ஆயுத முனை அராஜக நடவடிக்கைகள் கோலோச்சுகின்றது.

மக்களின் எழுச்சிமிக்க போராட்டங்களை திட்டமிட்டு திசை திருப்பும் ஏகாதிபத்தியங்களின் சதிகளும், பிராந்திய ஆக்கிரமிப்பாளர்களின் மறைமுக–நேரடி ஊடுருவல்களும் சிறுமுதலாளியத்த இராணுவ கண்ணோட்டம் உள்ள இயக்கங்களின் தலைமை வழிகாட்டலில் ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் இவை தொடர்கதையாகிவிட்டது. இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் உலகின் ஒவ்வொரு மூலை முடக்குகளிலும் நடக்கும் தேசிய விடுதலைப் போரில் அவ்வவ் நாட்டு புரட்சிகர தேச பக்த சக்திகள் முகம் கொடுக்கின்ற–முகம் கொடுத்த அரசியல்–இராணுவ, அமைப்பு பிரச்சனைகளைத்தான் தமிழ் ஈழ தேசபக்தர்–களாகிய நாமும் முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசையும் அதனது படைகளையும் எதிர்த்து போரிடுவதன்மூலம் வளர்ந்து வந்த எல்லா இயக்கங்களும் 1987 இந்திய–இலங்கை துரோக ஒப்பந்தத்தின் பின் ஒரு மாற்ற நிலைக்குள்ளாகினர். எல்.டி.டி.இ. தவிர்ந்த ஏனைய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு சிறிலங்கா அரசுக்கு எதிரான போராட்டத்தை கைவிட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாண சபையை ஏற்றுக்கொண்டு இந்திய சார்புக் குழுக்களாக செயல்பட தொடங்கினர். எல்.டி.டி.இ. ஒப்பந்தத்தின் பிரகாரங்களை ஏற்றுக் கொள்வதில் முரண்படாத போதும் அமைய இருந்த இடைக்கால அரசின் தனது இயக்கத்துக்கு மட்டுமே முழு அளவு இயக்க அதிகாரம் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது தொடர்ந்து இந்தியரசை எதிர்க்கும் நிலைக்கு யுத்த ரீதியாகவும் இறங்கியது. சமாதான முகமூடி போட்ட இந்திய ஆக்கிரமிப்பு படையை அம்பலப்படுத்துவதில் எல்.டி.டி.இ இன் பங்கு குறிப்பிடக்கூடியது. இந்திய–இலங்கை ஒப்பந்தம் என்பதே இலங்கை அரசின் முழு விருப்பத்துடன் நடந்ததல்ல இந்தியரசின் பிராந்திய ரவுடித்தன பயமுறுத்தல் மூலமும் ஏற்பட்ட ஒன்று என நாம் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளோம். எல்.டி.டி.இ. – ஐ.பி.கே.எப் யுத்தமும் அதனை தொடர்ந்து இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றமும் சிங்கள மக்களின் இந்தி அரசுக்கும் எதிரான போராட்டங்களும் சிறிலங்கா அரசையும் கூட இந்தி எதிர்ப்பாளன் என காட்டவைத்தது. ஐ.பி.கே.எப். வாபஸ் குறித்து ஒரு கால வரையறையை ஏற்படுத்தும் ஒப்பந்தம் வரை அது சென்றது. இக்காலங்களில் சிறிலங்கா அரசுக்கும் – எல்.டி.டி.ஈ.க்கும் இடையே ஒரு சுமுகமான உறவு வளர தொடங்கியது, இந்திய ஆக்கிரமிப்பு படைக்கு எதிரான போராட்டத்தில் எல்.டி.டி.ஈ.–இன் இந்த நடவடிக்கை ஒரு இராஜதந்திரம் மிக்க நடவடிக்–கையாகவும் பார்க்கப்பட்டது. நிறுத்திவைக்கப்பட்டிருந்த இந்திய படை வாபஸ் மீண்டும் வாபஸ் ஆக தொடங்கியதும் தமிழ் ஈழ பகுதிகளில் இயக்கங்களுக்கு இடையிலான மோதலும் அழித்தொழிப்பு நடவடிக்கைகளும் மீண்டும் உச்சக்கட்டத்தை தொட ஆரம்பித்துள்ளது.

இயக்கங்களுக்கு இடையிலான மோதல் ஒரு இயக்கம் மாற்று இயக்கத்தை அழிக்க முன்வருவது என்பது 1987 பின் ஏற்பட்ட ஒன்றல்ல சிறுமுதலாளித்துவ சிந்–தனை கொண்ட குழுவாதமனப்பான்மையுள்ள தலைமை அதிகார போட்டியுள்ள இன்றைய காலகட்ட தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு புரட்சிகர அரசியல்பார்வையற்ற இவ்வியக்கங்களின் ஆரம்பகால நடவடிக்கைகளில் இருந்தே இயக்க மோதல்என்பது ஒரு தொடர் நிகழ்ச்சி போக்காகயுள்ளது. இவற்றுக்கு பிரதான காரணம் அவ்வியக்கங்களின் வழிகாட்டும் தத்துவமான சிறு முதலாளிவர்க்க சித்தாந்தமும் அந்த இராணுவ கண்ணோட்டமுமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போது நடந்துவரும் இயக்க மோதல்களும் அழித்தொழிப்புக்களும் ஜூலை 87-க்கு முந்திய நடவடிக்கைகளில் இருந்து அரசியல் ரீதியாக குணாம்ச மாற்றங்கள் கொண்டதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்ஈழ பகுதியில் சிறிலங்கா ராணுவத்துக்கெதிரான நடவடிக்கைகள் மூலமும் வெகுஜன வேலைகள் மூலமும்-தமிழ் மக்கள் மத்தியில் யாரை பலசாலிகளாக்கி கொள்வது சிவில் நிர்வாகத்தை யாரது கைகளுக்கு எடுத்துக் கொள்வது என்பதே அன்று பிரதான பிரச்சனையாக இருந்தது. இக்காலங்களில் ஒவ்வொரு இயக்கமும் ஐக்கியம் கூட்டு நடவடிக்கை பற்றி வாய்கிழிய பேசியபோதும் நடைமுறையில் தனி இயக்க அதிகாரத்தை நிலைநாட்டும் நாசகத்தில் காலம் கழித்தனர். சிறிலங்கா அரசுக்கு எதிரான எந்த கூட்டு நடவடிக்கைகளும் செய்யப்பட்டதில்லை என்பது கவனத்துக்குரியது. எல்.டி.டி.ஈ.இன் மற்றைய இயக்கங்கள் மேலான மோசமான அழிப்பு நடவடிக்கைகளுக்கு சரியான பதிலடி கொடுக்க முன்னேறும் அளவுக்கு மற்றைய இயக்கங்களின் அக பலயீனங்கள், இராணுவ துறையிலான வளர்ச்சியின்மைகள் காரணமாக இருந்தது ஆனால் அவ்வியக்கங்கள் தமது அக பலயீனத்தை மறைத்து அதையே இந்தியரசை சார்ந்து இருக்கும் ஒரு கொள்கையாக மாற்றிக் கொண்டனர்.

இந்தியரசுடன் நேரடியாக பகைத்துக் கொள்ளமுடியாத சிறிலங்கா அரசின் இரட்டைவேடம் ஐ.பி.கே.எப். க்கு எதிராக எல்.டி.டி.ஈ. நடத்திய யுத்தத்தின் மூலம் தனது ஒரு பக்கத்தின் குணாம்சங்களை வெளிப்படுத்தியது. மறைமுகமாக எல்.டி.டி.ஈ. க்கு வழங்கிய ஆதரவுகள் அரசியல் வட்டாரத்தில் வெட்டவெளிச்சமானவையாகும் ஆனால் பலமிக்க ஆக்கிரமிப்பாளனுக்கு எதிரான அரசியல்-வட்டாரத்தில்-வெ- இராஜதந்திர நடவடிக்கை என பார்க்கும்போது ஸ்தூலமான சூழலில் அந்நடவடிக்கைகள் சரியானதுதான் ஆனால் அந்நடவடிக்கைகளின் பலனை யார் அனுபவிப்பார்கள் என்பதே கேள்விக்குறி.

இந்தியரசின் இலங்கை மீதான ஆக்கிரமிப்பும், சர்வதேசளவில் படைவாபஸ் குறித்து சிறிலங்கா அரசு எடுத்த நடவடிக்கைகளும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ராஜீவ் அரசுக்கு பல பாதகங்களை உண்டு பண்ணியது சமாதான புறா என்ற பெயரில் சூசகமாக இந்திய அரசு எடுக்கும் சதி நடவடிக்கைகள் இலங்கை பிரச்சனையில் அது ஆக்கிரமிப்பு புறாதானா? என்ற கேள்வியை பாமர மக்கள் மத்தியிலும் எழுப்பியது உண்மை. இந்திய ஆளும் வர்க்கத்தின் தேசிய வெறிக் கொள்கையை ஓரளவுக்காவது இந்திய மக்கள் உணர வாய்ப்பு கிடைத்தது என்றால் மிகையாகாது.

வரலாற்றின் வழக்கமாக ஏகாதிபத்தியங்களும் ஆக்கிரமிப்பாளர்களும் மற்றைய நாடுகளை ஆக்கிரமித்து துவம்சம் செய்யும் போது ஆக்கிரமிப்புக்குட்பட்டநாட்டுமக்களின் கடுமையான எதிர்ப்பு போராட்டங்களை சந்திக்கின்றனர். சர்வதேச மக்கள் முன் அவர்களது போலி முகங்கள் (அவர்கள் பேசும் ஜனநாயகம் சுதந்திரம், அமைதி ஆயுததடை, அணு ஒழிப்பு ...) அம்பலமாகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக தமது நாட்டு மக்களின் நம்பிக்கையை இழந்து எதிர்ப்பை சம்பாதிக்கும் நிலைக்கு செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு தாம் தனிமைப்படுத்தப்படும் போது அவர்கள் தமது மனிதநேயமற்ற வெறிக்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்த கொள்கைகளில் மறு நிர்மாணம் செய்கின்றனர். ஒவ்வொரு ஏகாதிபத்தியமும், ஆக்கிரமிப்பு அரசுகளும் தமக்கு நம்பிக்கைக்குரிய பொம்மை ஆட்சிகளை மக்கள் விரோத தலைமைகளிடம் கைமாற்றிக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்கின்றது மக்களை ஏமாற்றக்கூடிய விதத்தில் மக்கள் பாதுகாப்புக்குழு, தேசிய தொண்டர் படைகளை உருவாக்கிவிடுகிறது. இதற்கு அந்நாட்டில் உள்ள தேச விரோத அரசியல் சக்திகளையும் பயன்படுத்துகின்றனர். இந்நிலைமையில் இத்தகைய தேச விரோத அரசியலாளர்களை தேசபக்தர்கள் களையெடுப்பது சரியானதுதான் (உ.ம் அமிர்தலிங்கம் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை) ஆக்கிரமிப்பாளர்களும் ஏகாதிபத்தியங்களும் இத்தகைய சதிகளை அமுல் படுத்தக்கூடிய வகையில் நீண்டகால படைவாபஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் மறுபக்கம் ஏற்கனவே முரண்பட்டு தனி இயக்க அதிகாரங்களும் தலைமை போட்டிகளுக்கும் பலியாகியுள்ள இயக்கத்தை அல்லது இலக்கங்களை மற்ற ஏகாதிபத்தியங்கள் தாம் தக்கவைத்துக்கொள்ள மேல் கூறிய இயக்கங்களுக்கும் பல வழிகளிலும் உதவுவதாக நடித்து அந்நாட்டில் தமக்கு சார்பான மாற்று அணிகளை வளர்க்கின்றது. உ.ம் ஆப்கான் மக்களின் உன்னதமான போராட்டத்தில் 1976-இல் நுழைந்த ரஷ்ய ஆக்கிரமிப்பு படைகள் 10 வருடங்களில் தமக்கு சார்பான நஜிபுல்லா தலைமையிலான மக்கள் விரோத பொம்மை அரசை நிறுவியது. ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் கைக்கருவியாக அந்த அரசு இயங்குகின்றது. அந்த நம்பிக்கையில் ரஷ்யா 88-ல் தனது படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டது. நஜிபுல்லா அரசை எதிர்க்கும் முகாஜீன் கொரில்லாக்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் பாகிஸ்தான் ஊடாக ஊக்குவித்து தாக்குதல் தொடுக்க வைக்கின்றது. இன்று தமிழ் ஈழ மக்கள் சந்திக்கும் துன்பங்கள் துயரங்கள், கொடூரங்கள் எல்லாம் ஆப்கான் மக்களின் வாழ்வில் ஒரு கதையாகிவிட்டது. போராட்டம் இன்றி வாழ்வு இல்லை என்பது அவர்களுக்கு தெரிந்துவிட்டது.

தேசிய இன விடுதலைப் போர்களாலும், மக்களின் சமூக பொருளாதார கலாச்சார அரசியல் விடுதலைப் போர்களாலும் குறிப்பிட்ட நாட்டு இவ்வாத முதலாளித்துவ அரசுகள் தாம் உயிர் வாழ முடியாத நிலைக்குள்ளாகும் போது அவ் அரசுகளே தமக்கு சார்பான முதலாளித்துவ அரசுகளிடமும் ஆக்கிரமிப்பாளர்களிடமும், ஏகாதிபத்தியங்களிலும் அரசியல்-இராணுவ உதவிகளை கோருகின்றது. இது அவ் அரசுகளின் மனப்பூர்வமான கோரிக்கையாகவும், இருக்கின்றது. உ:ம் 1971-இல் சிறிலங்கா அரசை எதிர்த்து சிங்கள மக்கள் ஜனநாயகம், சுதந்திரம், விடுதலை வேண்டி ஜே.வி.பி. தலைமையில் நடத்திய மாபெரும் கிளர்ச்சியை அன்றைய ஆளுங் கட்சியான எஸ்.எல்.எப்.பி. அரசு இந்திய படைகளின் துணையுடன் 13000 இளைஞர் யுவதிகளை கொன்று கொலை வெறி நடத்தியபோது அவை "நாட்டின் அமைதிக்காக?" செய்யப்படுவதாக தனது பிரச்சார கருவிகள் மூலம் கதை அளந்தது. ஆனால் 1987-இல் தமிழ் ஈழ இயக்கங்களை தனது இராணுவ பலம் கொண்டு சில காலம் தாக்கு பிடிக்கமுடியும் என்ற நிலை இருந்த போதும் தனது முழுவிருப்பத்தையும் மீறி நடந்த ஒப்பந்தத்தின் பின்னர் எல்.டி.டி.ஈ - ஐ.பி.கே.எப். க்கும் இடையிலான யுத்தத்தின் போக்கை இரசித்த சிறிலங்கா அரசு தனக்கும் இந்திய மேலாண்மை தனத்துக்கும் இடையிலான முரண்பாட்டை (இம் முரண்பாடு என்பது தெற்காசியாவில் உள்ள சிறிய நாடுகளை ஆக்கிரமிக்கும் போக்குள்ள இந்திய மத்தியரசுக்கும் தெற்காசியாவில் உள்ள மற்ற எல்லா நாட்டு அரசுகளுக்கும் இடையிலான இயல்பான முரண்பாட்டின் ஒரு பகுதிதான். இவ்வித மான புதிரான முரண்பாடு என்பது ஏகாதிபத்திய கால கட்டத்தில் முதலாளி வர்க் அரசுகளின் ஒரு பிரதான வெளிப்பாடாகும்) எல்.டி.டி.ஈ யை கொண்டு பயன்படுத்தும் முயற்சியில் அதனூடாக தனது எதிர்ப்பை காட்டும் முயற்சியும் இறங்கி -யது. இதன் போது ஐ.பி.கே.எப். ஐ பற்றிய எதிர்புணர்வு பிரச்சாரங் களை தனக்கு தேவையான அளவு வானொலி,வானொளி செய்தது. இதில் சொல்லக்கூடியளவு வெற்றியும் சிறிலங்கா அரசு பெற்றது. அதேவேளை தென்னிலங்கை மக்கள் நடத்திய வெகுஜன போராட்டங்களை துப்பாக்கிமுனையில் தடுத்துநிறுத்தி பல கொலைகளை செய்தது. அத்துடன் நின்றுவிடாது - மக்களின் தெளிவான போராட்டங்களை "இந்தியப்படை வாபஸ் ஆவதை தடுத்து நிறுத்தும்" எனவும் எச்சரித்து, கூக்குரல் காதில் பூச்சுற்றியது. இப்போது சிறிலங்கா அரசின் இரண்டு முகங்களை தெளிவாக காணமுடிகிறதல்லவா?

பல்வேறு நெருக்கடிகளின் பின் ஐ.பி.கே.எப்.-வாபஸ் சிறிலங்கா அரசும்- இந்தியரசும் ஐ.பி.கே.எப் வாபஸ்குறித்து ஒரு கால வரையறையை குறித்து கொண்ட பின் பகுதிவாரியான படை வாபஸ் துவங்கியது இதில் இந்திய அரசு தனது " சதி செயல்கைங்கரியத்தை" மிகவும் நேர்த்தியாக பயன்படுத்து கின்றது. தனக்கு சார்பான இலக்கங்களின் ஆதிக்கம் மிகுந்த அம்பாறை,மட்ட சிறப்பு பகுதிகளில் இருந்த முதல், இரண்டு கட்டமாக ஐ.பி.கே.எப். விலக்கி கொள்ளப்பட்டவுடன் மாற்றாக கட்டாயத்தின் பேரில் பிடித்துவந்த தமிழ் இளைஞர் களை வைத்து இந்திய இராணுவ பயிற்சி கொடுத்து கட்டப்பட்ட <u>தமிழ் தேசிய தொண்டர் படை</u> ( T.N.A ) என்ற குண்டர்படையை வைத்து ஐ.பி.கே.எப் விலக்கிகொள்ளப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை புனரமைத்தல், தமிழ்

www.tamilarangam.net

மக்களை பாதுகாத்தல், எனக்கூறி தனது எதிரிகளை பெருமாள் தலைமையிலான மாகாண அரசு வேட்டையாட தொடங்கியுள்ளது. இங்கு எல்.டி.டி.ஈ. இன் தந்திரோபாயம் குறித்தும் கவனிக்கவேண்டும். ஐ.பி.கே.எவ். வாபஸ் பெறத் தொடங்கிய பகுதிகளில் தனது தனி இயக்க அதிகாரத்தை நிலைநாட்ட சிறிலங்கா அரசின் ஒத்துழைப்புடன் இந்திய சார்புக்குழுக்களின் இராணுவமுகாம்களை தாக்க துவங்கியது. இந்தாக்குதலை எல்.டி.டி.ஈ. உரிமை கோரியுள்ளது. அதி அதில்தனது இயக்க போராளிகள் 5 பேர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக செ செய்யப்பட்டது என்றும் எல்.டி.டி.ஈ. தனது வழமையான பாணியில் தான் நினைத்த மாத்திரத்தில் அழித்தொழிப்புகளை செய்வதும் பின்பு ஏதாவது கதை விடும் தன்மையும் இங்கும் வெளிப்பட்டது. ஒரு இயக்கம் தனது 5 போராளிகளை மற்றைய அணி கொலை செய்ததிற்கு பதில் 45 பேரை பலிவாங்குமானால் இந்த இயக்கங்களின் மோதலினேயே தமிழ் ஈழ சமூகம் அழிந்துபோகும். எல்டி.டி.ஈ. பொறுத்தவரை அதனது பலம் எப்போதும் தனது இராணுவசக்தியை நம்பியே உள்ளது. எனவே அது தனது இராணுவசக்திக்கான மனித பலத்தை இழக்க அனுமதியாது. ஏனெனில் அது தன்னை தானே தற்கொலை செய்வதற்கு சமமாகி விடும் இதை எந்த முட்டாளும் செய்யமாட்டான். அதே வேளை தமிழ் மக்கள் விரோதிகளை அன்னிய ஏஜென்டுகளை மக்கள் மத்தியில் அம்பலபடுத்தி மக்கள் ஆதரவுடன் அதன் மூலக்கருக்குகளை களையெடுப்பதுதான் சரியான வழி. இதனை செய்ய எல்.டி.டி.ஈ. யின் வர்க்க சிந்தாந்தம் அனுமதியாது என்பதும் எமக்குத்தெரியும்.

தற்போது இலங்கையின் அரசியல் உள்விவகாரங்களில் இந்தியரசின் சதி என்னவெனில் இந்திய சார்பு குழுக்கள் மூலம் கட்டப்பட்ட தேசிய தொண்டர் படையிய? கொண்டு சிறிலங்கா அரசுக்கு நெருக்கடி கொடுப்பதும் இதன் வெளிப்படு தான் அண்மையில் 3 சிங்கள போலீஸ் நிலையத்தின் மீது தாக்குதலாகும். அதன் மூலம் தனது காலடிக்கு சிறிலங்கா அரசை கொண்டு வர முயற்சித்தல் இரண்டு எல்.டி.டி.ஈ சிறிலங்கா அரசின் கையாள் என்று கூறி தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தனிமைப்படுத்தல் ,யுத்த நடவடிக்கைகளையே காட்டி தனது இருப்பை பேணும் எல்.டி.டி.ஈ என்ன செய்யும் என்பது அதற்கே வெளிச்சம். ஆப்கன்ன மக்களின் விடுதலை போராட்டத்தில் ஏகாதிபதியங்களும் அவற்றின் நேரடி இராணு வலய நாடுகளும், ஆப்கானிஸ்தானில் நமக்கு சார்பான ஏஜென்டுகளைக்கொண்டு என்ன செய்கிறார்கள் என்பது ஒரு பாடம்ல்லவா?

இதேபோன்றதொரு நிலைமைதெற்காசியப்பிராந்தியத்தில் இலங்கையில் நிகழலாம் என நாம் ஏன் எதிர் பார்க்கக்கூடாது? இந்தியரசின் ஆதரவுடன் பெருமாள் தலைமையிலான வடக்கு, கிழக்கு மாகாண ஆட்சியும்அதை எதிர்க்கும் எல்.டி.டி.ஈ. யை அமெரிக்க ஏகாதிபத்தியம் தனக்கு சார்பாக பயன்படுத்தும் நிகழ்ச்சியும் நடக்கலாம். அமெரிக்காவுக்கும் எல்.டி.டி.ஈக்கும் இடையிலான உறவை வளர்த்து விடுவதில் சிறிலங்கா அரசு தனது பங்கையும் ஆற்றி தன்னையும் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கும். இலங்கையை இராணுவ மயப்படுத்துவதில் இரத்தக்காடாக்குவதில் ஏகாதிபத்தியங்களும் ஆக்கிரமிப்பாளர்களும் தமது ஏ நோக்கத்தை நிறைவேற்றத் துடியாய் துடிப்பார்கள். இவர்களது "திருவிளையாடல் கள்" மக்களை சொல்லொண்ணா துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் நீடித்த- ? நிலைகுலைந்த அமைதியற்ற வாழ்வுக்கும் உள்ளாக்கும். ஆனால் இந்த கொலை வெறியர்களால் திட்டமிட்டு நடத்தப்படும் ஆக்கிரமிப்பு ,யுத்தங்களை " மக்கள் யுத்தத்தால் முறியடிக்க முடியும் என்பதுதான் மனித வரலாறு.

-தொடர்ச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழ பகுதிகளில் நடக்கும்மிகக் கொடூரமான காட்டுமிராண்டித்தனமான கொலைகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் திடீர் திடீர் இராணுவ நடவடிக்கைகளுக்கும் பின்னால் இருந்து இயக்கும் சர்வதேசியவிஷமிகளை நாம் கண்டு கொள்ளவேண்டும். இந்த கொடூரங்களை எல்லாம் எமது புனித பூமியில் நடைமுறைப்படுத்தும் இந்த சிறுமுதலாளித்துவ இயக்கங்களால் இந்த விஷமிகளை விட்டு விட்டு உயிர்வாழமுடியாது. ஏனெனில் அவர்கள் மக்களை நேசிப்பதற்கும் அவர்களில் தங்கி நிற்பதற்கும்தயாரில்லாதவர்கள் ஆயுதங்களையும் அராஜங்களையும் எல்லாவற்றுக்கும் மேலாக கருதுபவர்கள் அவர்களது தவறான போராட்டபாதையும், அன்னிய நாடுகளின் கையாட்களாக இருந்து "சுதந்திரம் வாங்கும் நாகத்தின்? பித்தலாட்களையும் கண்டு கொண்டுள்ள ஒவ்வொரு போராளியும் தாய்நாட்டிற்காக தான் செய்யும் தியாகத்தை, அர்ப்பணிப்பை ஒரு கும்பலின் விடுதலைக்கு உரமாக்க அனுமதிக்க கூடாது. தமிழ் ஈழ தேசிய இனத்தின் விடுதலைக்காக தமிழ் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக போராடும் உண்மையான தேச பக்த இயக்கத்தின் செயற்பாடுகளுடன் இணைந்துக் கொள்ள வேண்டும். அதுவே ஒவ்வொரு குடிமகனின் சுதந்திரத்துக்கும் நாட்டின் முழுமையான விடுதலைக்கும் உத்ரவாதமளிக்கும்.

அமேரிக்க. ரஷ்ய ஏகாதிபத்தியங்களாலும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களாலும் சிறிலங்கா இனவாத அரசாலும், தமிழ் தமிழீழ துரோக இயக்கங்களாலும் பலியாகிக்கொண்டு இருப்பது தமிழ் ஈழ மக்கள்தான். இதை தடுத்து நிறுத்த வேண்டிய கடமை ஒவ்வொரு தேச பக்த புரட்சியாளர்களதும் கடமையாகும்.

அரசியல் நிகழ்ச்சிகளும் வரலாற்று போக்கும் இயங்கி கொண்டிருக்கின்றது. இன்றைய ஸ்தூலமான அரசியல் நிலமைகளை கணக்கில் கொண்டு தமிழீழ மக்களின் தேசிய விடுதலை போரை ஒரு புதிய யுத்தமாக, மக்கள் யுத்தமாக மாற்றி தொடர வேண்டிய நடமுறை அவசியத்தை புரிந்து கொண்டு-இதை புரிந்து கொள்வதென்பது. அரசியல் நிலமைகளை விவாதிப்பது, அறிக்கைகள் வெளியிடுவதுடன் முற்றுப் பெறுவதல்ல அதுடன் கூடவே புரட்சிகரமான தேசபக்த இயக்கம் ஒன்றை கட்டுவது என்ற பெரும் பணியுடன் தொடர்பு பட்டது. தமிழீழ அரசியல் -இராணுவ கோட்பாட்டின் போக்கைமாற்றி அமைக்கக்கூடிய ஒரு பௌதீக சக்தியாக புரட்சி மக்கள் சமுத்திரத்தில் புரட்சிகர இயக்கத்தை வளர்ப்பது என்ற கடின பணியை உள்ளடக்கியது. இப்பணியை செய்வதில் நாம் எந்த அளவு புரட்சிகர அரசியல் தெளிவுள்ளவர்களாவும் ஸ்தூலமான நிலமைகளை கணிப்பிட்டு நடமுறை செயற்பாடுகளில் எவ்வளவு பங்கு கொள்கிறோம் என்பதை பொருத்தே நமது வெற்றி தீர்மானிக்கப்படும்.

—— சிவ சண்முக மூர்த்தி.

" வாழ்வு என்பது மனிதனின் மதிப்பிற்குரிய செல்வம் ஒரு மனிதன் ஒரு முறைதான் வாழமுடியும் என்பதால் அந்த வாழ்க்கையை சில்லறைத்தனமான, பய பயனற்ற, கோழைத்தனமான முறையில் வாழ்ந்தோம் என்ற ஏக்கம் மனதை வா வாட்டி வதைக்காத வகையில் மனிதன் வாழவேண்டும். வாழ்வின் இறுதியில் திரும்பி பார்க்கையில் என்னுடைய வாழ்வு முழுவதையும் பலம்-திறம் அனைத்தையும் மிகவும் உன்னதமான, மிகவும் மகத்தான இலட்சியத்தை அடைவதற்காக மனித குலத்தின் விடுதலைக்காக அர்பணித்தேன் என்று பெருமிதத்துடன் கூறும் வகையில் வாழ வேண்டும்.

== தோழர் லெனின்.

*.:.*.:.*.:.*.:.*.:.*.:.*.:.*.:.*

www.tamilarangam.net

# 1987 ஜூலையின் பின்பான தமிழ் ஈழ அரசியலும், அவசிய உடனடி அரசியற் செயற்பாடும்

1987 ஜூலையில் ஏற்பட்ட இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின் தமிழ் ஈழ அரசியல் விவகாரமானது இந்து மகாசமுத்திர இராணுவ சமநிலைப் போட்டிக்கான கண்ணிகளில் ஒன்றாக மாறிவிட்டது. இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் தமிழ் ஈழ மக்களுக்கு திகைப்பினையும், அருவருப்பையும், பயத்தையும் தடுமாற்றத்தையும் உண்டாக்கிவிட்டது. நண்பன்? என்று நம்பியிருந்த இந்திய மத்திய அரசு தான் தலையிட்ட ஓர் இருமாதத்திலேயே தான் தமிழ் ஈழத்தை அழிப்பதில், அதைக் காலில் போட்டு மிதிப்பதில் சிறிலங்கா அரசுக்கு சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்துவிட்டது. இது எதிர்பார்த்தது ஒன்றுதான். தமிழ் ஈழம் தான் தங்கள் முடிந்த முடிவு என்று கோரிநின்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் அக்கோரிக்கையை மெல்ல கைக்கழுவி சிறிலங்கா அரசுடன் நல்லுறவை ஏற்கச் கொள்வதில் யார் வெற்றிபெறுவது, யார் கூடிய விட்டுக்கொடுப்புகளைச் செய்வது என்பதில் முண்டியடித்து முன்னேறுவது மற்றொரு திகைப்பும் அருவருப்புமாகும். பொதுமக்களையும், அவர்கள் சொத்துக்களையும் அழிக்காமல் பயங்கரவாதத்தை எதிர்த்து வெற்றிபெற முடியாது என்று அத்துலத் முதலி கூறும்போதும், சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்களை இராணுவ கேடயங்களாக பயன்படுத்தும்போதும் அதைக் கண்டித்து, சிங்கள இனவாதிகளின் மனிதாபிமானமற்ற செயல் இது என்று விமர்சித்த இயக்கங்கள் இன்று அதே காரியத்தை இந்திய இராணுவம் செய்யும்போது அதை நியாயப்படுத்துவது மாத்திரமல்ல தாமும் அதே காரியத்தை தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு செய்வதைக் கண்டு மக்கள் திகைப்பிரமை பிடித்தவர்களாகியுள்ளார்கள். பட்டினி போட்டு பொருளாதார தடைகள் போட்டு தமிழ் ஈழத்தவர்களை பணியவைத்த அத்துலத்முதலி விடுத்த முயற்சியிலும்விட சக்திமிக்கதான முறையில் சிவில் நிர்வாகத்தையும், மக்களின் அன்றாட பொருளாதார நடவடிக்கைகளையும் குலைக்கக்கூடிய முறையில் ஆயுதபாணியான அனைத்து இயக்கங்களும் நடந்து கொள்வது மக்களைச் சொல்லொணா வேதனைக்குள்ளாக்கியுள்ளது. தமக்குள் இருக்கும் போட்டியின் காரணத்தால் அந்நிய சக்திகளுடனும் தமிழ் ஈழ எதிரிகளுடனும் சேர்ந்துகொண்டு ஒருவரை ஒருவர் கொன்று குவித்துவருவதும், எந்த இயக்கத்திலும் சாராது வெறுக்கும் ஆதரவு வழங்காது வாழ்ந்துவரும் சாதாரண பிரஜைகளையும், இயக்க மோதலைப் பொருத்தவரை அரசியல் ரீதியில் நடுநிலை வகிப்பவர்களையும் அடித்து நொருக்கி வருவதும்; காரணம் கூறாது யார் செய்தது என உரிமைகோராது நடுவீதிகளில் இரவு நேரத்தில் நாய்களைப்போல் சுட்டுப்போட்டு மறைந்துகொள்வதும் இன்று அனைத்து சிறுகுழுக்களினதும் ஆயுதபாணிகளாலும் நடத்தப்படும் செயல்களாகி விட்டன. சிறிலங்கா அரசு சுட்ட "இளைஞர்களிலும்" விட நம்மவர்கள் சுட்ட "இளைஞர்களின்" எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. "இன்பா" நீ இறக்கவில்லை பல இளைஞர்களின் எழுச்சிக்கு பிறப்புக்கு வித்தாகியுள்ளாய்" என்று இயக்கங்கள் சொன்னது இதற்குத் தானோ? சுதந்திரமாக அரசியல் பேசுவதற்கான உரிமைகளைத் தடுப்பதும், மாற்று இயக்கத்தின் வெளியீடுகளை படிப்பதும், தம் வசம் வைத்திருப்பதும் கொலைத் தண்டனைக்குரிய குற்றமாக கருதுவதும்; போராட்டகாலத்தில் இருந்து வெளிவரும் அனைத்து வகை பத்திரிகைகளும், இலக்கிய சஞ்சிகைகளும், கலைப்படைப்புகளும் தமது கருத்துக்கு எதிரானதாக இருக்கக்கூடாது என்று ஆணைபிறப்பிப்பதும், நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிய தகவல்கூட தாம் கூறியமாதிரியே போடும்படி நிர்ப்பந்திப்பதும் தவறினால் விசாரணையின்றி கொலை செய்யப்படுவதும்; எந்தவகை ""ஜனநாயகம்"" உள்ளடங்குகின்றது? எந்த வகையான தமிழ் ஈழத் தாகமாகின்றது? மக்கள் சலித்துப் போய் உள்ளார்கள்.

அந்நிலைமைகளின் காரணத்தால் மக்கள் தமது அத்தியாவசிய கருமங்களைக் கூட செயற்படுத்த முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. அன்றாடப் பொருளாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. சிவில் நிர்வாகம் சூனியமாய் இருக்கின்றது. கட்டாய இராணுவ ஆட்சேர்ப்புக்கு பயந்து இளைஞர்கள் வீடுகளிலும், காடுகளிலும், இலங்கையின் தென்பகுதியிலும் முடங்கிக் கிடக்கிறார்கள். பஞ்ச நிலைமை தலைதூக்கத் தொடங்கிவிட்டது. இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவை நிறுவனங்கள் வழங்கும் உடன் நிவாரணங்களுக்காக சில கிலோ அரிசி, நூறு அல்லது இருநூறு ரூபாய்கள், பல நாட்களுக்கு மக்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிவது சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

கனிவுடன் திருப்புக..2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறுபுறத்தில் இதற்கு எதிரான ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினதும், மலைசாதி மக்களினதும் போராட்டத்தினை தனது கரங்களைப் புகுத்தி அவ்வியக்கங்களைப் பலவீனப்படுத்துவதும், மத்திய அரசை தமது செல்வாக்கினுள் கொண்டு வரவும் முயற்சிக்கின்றது.

## இந்தியா பிராந்திய வல்லரசா?

இந்தியா பிராந்திய வல்லரசாவதை யாவும் அறிந்த ஒன்றேயாகும். தெற்காசிய பிராந்தியத்தில் மாத்திரமல்ல முழு இந்துமாகா சமுத்திரப் பிராந்தியத்திலும் தான் ஒரு வல்லரசாக வர அது விரும்புகிறது. இவ்விதம் அவா தோன்றுவதற்கான அடிப்படை அரசியற்காரணி இந்தியாவின் உள்ளேயே உள்ளது. இந்து—உயர்ந்த பேரினவாத இந்திய மத்தியரசு இந்திய நாட்டினுள் பல தேசிய இனங்களையும், மதப்பிரிவினைகளையும், மலைஜாதி மக்களையும் அடக்கியவண்ணம் இருத்தலே இதற்கான காரணமாகும். நேபாளத்தையும், பூடானையும் தவிர இந்தியாவைச் சூழ உள்ள நாடுகளின் பெரும்பான்மையினர் இந்துக்கள் அல்லாதிருப்பது இந்திய மத்தியரசிற்கு வாய்ப்பாகவே அமைந்துள்ளது.

தனது பாதுகாப்பிற்காக தான் வல்லரசு நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம். ஆனால் தன்னைச் சுற்றியுள்ள ஏனைய நாடுகள் தன்னுடன் மாத்திரந்தான் இராணுவ தொடர்பு கொள்ளவேண்டும். அவ்விதம் மீறி வேறுநாடு-களுடன் உறவு கொண்டால் அது தனது சொந்த தேசிய நலனுக்கு அடையூறாக அமையும் என்பதே இவர்களின் வாதமாகும். இது வல்லரசு ஆதிக்கவாதிகளின் பழைய வளமையான வாய்ப்பாடுதான். கியூபா, நிகராகுவா, எல்சல்வடோர் போன்ற நாடுகளையிட்டு அமெரிக்கா இதே கொள்கையைத்தான் கடைபிடித்தது, வார்சோ ஒப்பந்த நாடுகளையிட்டு சோவியத் ருஷ்யாவும் கடைபிடித்ததும் இதே கொள்-கையைத்தான்.

இந்தியா, சோவியத் ருஷ்யாவின் குறுந்தேசியவாத மேலாதிக்கவாத அபிலாசைகளை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டது. தனது வல்லரசு நலனின் பாதுகாப்பிற்காக இந்தியாவின் பிராந்திய ஆதிக்க அபிலாசையை சோவியத் ருஷ்யா சில சம்பவங்களில் வளர்த்துவிட்டது. சில சம்பவங்களில் கண்டுங்காணாதது போல் இருந்துள்ளது. இன்றும் இருந்து வருகின்றது. பிராந்திய மோதல்களிலிருந்து பின்வாங்கும் ஒரு கொள்கையை சோவியத் ருஷ்யா தற்போது பின்பற்றுகின்றது. இது அநேக இடங்களில் சரணடைவு போக்காகவே உள்ளது.

இந்தியா துரிதவளர்ச்சி பெற்ற ஒரு முதலாளித்துவ அமைப்பைக் கொண்டிருந்தாலும் அது ஒரு முதலாளித்துவ நாடல்ல. மிகப்பெரும் நிலப்பரப்பும், மூன்றாம் உலக நாடுகளில் வறுமைக்கோட்டு எல்லைக்கு கீழ் வரும் சனத்தொகையில் அரைவாசிக்கும் கூடிய சனத்தொகையினைக் கொண்ட ஒரு மூன்றாம் உலக நாடாகும். இதனால் இந்திய முதலாளித்துவம் தனது வளர்ச்சிக்கும் விஸ்தரிப்புக்கும் அவசியமான பலவிடங்-களை தனது சொந்தநாட்டில் காணமுடியாதுள்ளது. அத்துடன் சேர்ந்து ஏனைய முதலாளித்துவ நாடுகளைப்போல் சந்தைப்போட்டி, நிதிமூலதனப்போட்டி, தொழில் நுட்பபோட்டி ஆகியவைகளின் மூலம் தன்னை வளர்த்தும், வியாபித்தும் கொள்ள தகமையற்றதாய் உள்ளது. உலகின் ஸ்திரமற்ற நாணயங்களில் இந்திய நாணயமும் ஒன்று. இந்நிலைமைகளின் காரணத்தால் முரட்டுத்தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலமும் திரைமறைவு இராணுவ நடவடிக்கைகளின் மூலமும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாய் தன்னை காட்டிக்கொள்வதால் ஏற்படும் அரசியல் நல்லுறவுகளின் மூலமே அது தன்னை வியாபித்துக் கொள்ளக் கூடியதாய் உள்ளது.

## இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க அவாவும் இலங்கைப் பிரச்சனையில் அதன் நெருக்கடிகளும்.

ஒரு புறத்தில் தமிழ்நாட்டை அடக்கவேண்டும். அதாவது இந்திய மத்தியரசுடன் அதை இறுக்கமாக கட்டிப்போட்டு வைத்திருக்கவேண்டும். மறுபுறத்தில் தான் தொடர்புகள் வைத்துக்கொண்டு சிறிலங்காவின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடிய அளவுக்கு அனுமதிக்கக்கூடிய முறையிலான மாகாண சபை ஒன்றை அமைக்கவும் வேண்டும். இந்திய மாநிலங்களிலும் விட இது அதிகாரம் பெற்றிருந்தாலே இது

www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இயக்கமோதல் என்ற நிகழ்ச்சியால் மாற்றீடு செய்யப்பட்டு இன்று அது இயக்க மோதலின் ஊடாக அந்நிய சக்திகள் நேரடியாகவே தமக்குள் நடத்தும் மோதலாக மாற்றமடைந்துள்ளது. இந்த நிலையில் மக்கள் என்ன நடவடிக்கை எடுப்பது? ஏதோ நடப்பது நடந்து நல்லமுடிவு வரும்வரை சும்மாயிருப்பதா? சுவீப் விழுந்தார்போல் நல்ல முடிவு வரும் என்று எதிர்பார்த்திருப்பதா? ஒரு எதிரியை அல்லது தீமையை வீழ்த்த மற்றைய எதிரியுடன் அல்லது தீமையுடன் சேர்வோம் என்ற முடிவுக்கு வந்து, செயற்படுவதா? எல்லோரையும் ஒரே நேரத்தில் எதிர்த்தல் என்று முடிவெடுத்து செயற்படுவதா? இதுதான் இன்று மக்கள் முன்னாலுள்ள இரு கேள்விகளாகும்.

பிரச்சனைகளின் காரணத்தையும், பிரச்சனைகளின் வளர்ச்சிப்போக்கையும் புரிந்து கொள்ளாமையே இக்குழப்பத்திற்கான காரணிகளில் ஒன்றாக அமைகின்றது. அந்த விவகாரத்தை சற்று நோக்குவோம்.

## தெற்காசிய பிராந்திய இராணுவ சமநிலை

இந்துமகா சமுத்திர பிராந்தியத்தை முழுமையாக வைத்துக்கொண்டால் அமெரிக்க இராணுவ பலமே மேலோங்கியுள்ளது. பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய மூன்று தெற்காசிய நாடுகளும் அமெரிக்க இராணுவ நிலையங்களாக மாறு-மானால் இந்துமகா சமுத்திரம் அமெரிக்க ஆதிக்கத்துக்குட்பட்ட நீர்ப்பரப்பாகமாறி விடும். பாகிஸ்தானில் இது நடந்துவிட்டது. இலங்கையிலும், வங்காளதேசத்திலும் இது நடைபெறவில்லை. அமெரிக்கா இதில் வெற்றி காணுமானால் இந்தியா அமெரிக்காவின் கடல் மேலாதிக்கத்திற்கு உள்ளாகிவிடும் ஆபத்து நிச்சயமானது.

இந்துமகாக் கடலின் மேலாதிக்கத்தை தனது கைகளால் எடுத்துக்கொள்ள அமெரிக்கா பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்ட வண்ணமாகவேயுள்ளது. இந்தியாவை ஒரு பிரதேச பொலிஸ்காரனாக முன் தள்ளிவிட்டு அதன்மூலம் அதை இராணுவ நெருக்கடிக்குள்ளாக்கி, தெற்காசிய நாடுகளில் இருந்து அதைத் தனிமைப்படுத்தி வைப்பது அமெரிக்காவின் தந்திரங்களில் ஒன்றாகும். இலங்கையில் இந்திய இராணுவம் தலையீட்டையும், மாலைதீவிலான தலையீட்டையும் அமெரிக்க அரசு விருந்துடுத்துக் கொண்டு ஆதரித்தது நினைவு கூறப்படவேண்டும். அதே நேரத்தில் இந்திய இராணுவ நிலைகொள்ளலுக்கு எதிரான சிறுமுதலாளித்துவ இயக்கங்களின் வெளிநாட்டு காரியங்கள் ஐரோப்பிய முகாம் நாடுகளிலேயே உள்ளன. சிறிலங்கா சங்கம் என்ற இந்திய எதிர்ப்பு அமைப்பு அமெரிக்காவிலேயே முனைப்பாகச் செயற்படுகின்றது.

அடுத்த நடவடிக்கை இந்தியாவைச் சூழ உள்ள தெற்காசிய நாடுகளை இந்தியாவுக்கெதிரான இராணுவ நிலையங்களாக மாற்றுவதாகும். இந்தியாவின் பிராந்திய ஆதிக்க நோக்கத்தையும், இந்தியாவின் உள் நிலவும் அடக்குமுறையையும் அமெரிக்கா தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கிறது. பாகிஸ்தானுக்கு தொல்லை கொடுப்பதற்காக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பயன்படுத்தி பாகிஸ்தானை இராணுவ மயப்படுத்தி வருகின்றது. இன்று பாகிஸ்தான் தாக்குதல் படைக்கலங்களை (offensive weapons )கொண்ட ஓர் நாடாகியுள்ளது. இந்திய மத்தியரசு சீக்கிய மக்களுக்கு எதிராக தொடுக்கும் அடக்குமுறைகளையும் பாகிஸ்தான் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கிறது. அமெரிக்காவின் அடுத்த இலக்கு இலங்கையாகும். தென்கிழக்காசிய நாடுகளில் அமெரிக்க இராணுவ செல்வாக்கு உள்ளதனால் வங்காளதேசத்தைவிட இலங்கையே முக்கியத்துவமாகின்றது. சிங்கள தேசியவாதத்தை இந்தியாவிற்கு எதிராக வளர்த்துவிடுவதில் தீர்மானகரமான வெற்றி கிடைத்துள்ளது. தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புணர்வு கணிசமான அளவு வளர்ந்துள்ளது. இந்தியாவிற்கு எதிராக இலங்கையை இராணுவமயப்படுத்தலுக்கவசியமான அரசியற் தயாரிப்பு செய்யப்பட்டுவிட்டது.

இவை மாத்திரமல்ல, இந்தியாவின் உள்ளே இந்தியாவிற்கெதிரான செயற்பாடுகளை தோற்றுவித்தும் வருகின்றது. ஒரு புறத்தில் இது மேலாதிக்கவாதத்திற்கு துணை போகின்றது. அரசியலுடன் நேரடி தொடர்பின்றி உள்ள ஆர்.எஸ்.எஸ்., போன்ற இந்து அமைப்புகளுடனும், இந்துமத அடிப்படையில் இருக்கும் அரசியல் அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இந்திய மத்தியரசின் இந்து-ஹிந்துராஜ் கொள்கையை ஆதரிக்கின்றது

கவிவுடன் திருட்டு - 3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எடுத்துவரும் நடவடிக்கைகளை நோக்கும்போது அது தெளிவாகத் தெரிகின்றது. புலிகளை முற்றாக அழிக்கும் நோக்குடன் இந்திய இராணுவ நடவடிக்கை அமைய-வில்லை. சில பிரதேசங்களை அவர்களுக்கு விட்டுக்கொடுத்துள்ளார்கள். அங்கு அவர்களை சுதந்திரமாக செயற்பட அனுமதித்துள்ளார்கள். யாழ்ப்பாண குடா-நாட்டையும் ஏனைய நகரங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க கவ்வட-யிடுகிறார்கள்.

* இலங்கையின் தேசிய இனச்சிக்கலுக்கு மாகாணசபை ஒரு பரிகாரந்தான். ஆனால் இவ்விரமான தொரு மாகாணசபை இந்திய மத்தியரசு சிறிலங்கா விவகாரங்களில் தலையிடுவதற்கான ஒரு வாய்ப்பாகவே அமையும். அடுத்தது மாகாணசபை அமைப்பு முறை காலப்போக்கில் சிங்கள பேரினவாதத்தை பலவீனப்படுத்தும் ஒன்றாய் மாறி விடும். இக்காரணங்களினால் அமெரிக்க முகாம் மாகாணசபை அமைப்பு முறையை விரும்பமாட்டாது. அதிகாரப்பரவலாக்கல் அற்ற ஓர் தீர்வையே விரும்புகிறார்கள். இது ஒரு புறம். மறு புறத்தில் மாகாணசபை அமைவு தமது கட்டுப்பாட்டை மீறி அமைக்கப்பட்டுதான் ஆகுமென்றால் அந்த "அரசாங்கம்" இந்திய ஆதரவு சக்திகளை முற்றும் விலக்கியதாக அமையவேண்டும் என்பதைச் நாட்டங்காட்டி வருகிறார்கள். ஆகவே மாகாண சபையின் தற்போதைய தலைமை இயக்கங்களை அழிப்பதில் மிகக் கூடிய கவனம் செலுத்துவார்கள். வரப்போகும் தலைமை இந்தியரசுடன் கடுமையான முரண்பாடுகளைக் கொண்டதாக இருப்பதிலும் அதிக அக்கறை செலுத்துவார்கள். மாகாண சபை பிரகடனிக்கப்பட்ட ஒரு அரசியற் சாசனம் அமையுமா அல்லது இந்திய எதிர்ப்பு அணிகளின் தலைமையிலான ஒரு மாகாணசபை அமையுமா என்பதை முன்கூட்டியே சொல்ல முடியாதுள்ளது.

* சிறிலங்காவை இந்திய எதிர்ப்பு அரசாகவும், நாடாகவும் மாற்றுவது, அதை இராணுவமயப்படுத்துவது, அமெரிக்க இராணுவ கேந்திரமாக்குவது.

* இடதுசாரி எதிர்ப்பு, தொழிலாளி வர்க்க எதிர்ப்பு, ஜனநாயக, விரோத சக்திகளே ஆட்சி அதிகாரத்துக்கு கொண்டுவரப்படுகிறார்கள் என்பது இராணுவ-மயப்படுத்தலின் தவிர்க்கவொண்ணா விளைவாகும்.

* தமிழ்நாட்டில் இந்திய மத்தியரசிற்கெதிரான தமிழ்நாட்டுத் தேசியஇயக்கத்தை ஊட்டுவதில் தமிழ் ஈழ தேசிய இயக்கங்களை பயன்படுத்தும் கொள்கையைக் கடை பிடிப்பார்கள். இதில் அமெரிக்க-சிறிலங்கா கூட்டு வெற்றிபெறுமா அல்லது இதே காரியத்தை இதன் மறுமுகமாக செய்வதில் இந்திய மத்தியரசு வெற்றிபெறுமா என்பது பற்றி கூறுவதற்குரிய காலம் இன்னும் கனியவில்லை . . . .

## சிறிலங்கா அரசின் நோக்கமும் செயற்பாடுகளும்

* சிறிலங்கா அரசு ஓர் அமெரிக்க ஏகாதிபத்திய முகாம் சார் அரசேயாகும். இச்சார்புத்தன்மை மென்மேலும் அதிகரித்தே செல்கின்றது. உள்நாட்டு முரண்பாடு களை தீர்வதில் இந்திய இராணுவத்தை சிற்சில வேளைகளில் பயன்படுத்திக் கொண்டாலும்கூட இது ஓர் அமெரிக்க சார்பரசேயாகும். இதனால் அமெரிக்காவின் தென்காசிய நலனுக்குகந்ததான கொள்கை எதுவோ அதுவே இதனது கொள்கை-யுமாகும்.

* சிறிலங்கா தேசிய வாதம் என்பது சிங்கள-பௌத்த பேரினவாதமேயாகும். அது இத்திசையை நோக்கி வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. இன்று இது இந்திய எதிர்ப்பை தன்னோடு மேலும் சேர்த்துக்கொண்டு அமெரிக்க முகாமை நோக்கி சாய்ந்து வருகின்றது. இதனால் அதிகார பரவலாக்கலை நிராகரிப்பதுவும், புரட்சிகர அணியினரை இந்திய ஆதரவு அணியினரை, அழித்தொழிப்பதுவும் இதனது சொந்தக் குறிக்கோள்களாகவும் உள்ளது. [illegible]

* உள்நாரில் பேரினவாதத்தை நிலைநிறுத்தவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னைப்பாதுகாத்துக்கொள்ளவும் தன்னை இராணுவமயப்படுத்த வேண்டியது இதனது சொந்த குறிக்கோளாகவும் உள்ளது.

6ம் பக்கம் திருப்புக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாத்தியம். அதே நேரத்தில் இவ்விதமானதொரு தமிழ் மாகாணசபை தமிழ்நாட்டில் தமிழ் தேசிய உணர்வை தூண்டிவிடும் வாய்ப்பை ஏற்படுத்தாது பார்த்துக்கொள்ளவும் வேண்டும். இது முதலாவது நெருக்கடி

* சிறிலங்கா அரசை மற்றோர் பாகிஸ்தானாக மாற்றாது இருக்க வேண்டும். நட்புறவை பேணுவதின் மூலமே இது சாத்தியம். அப்படியானால் படை விலகல் அவசியம். ஆனால் இப்படிப்பட்ட சிறிலங்கா அரசை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதை சாத்தியமானதாக்கவும் வேண்டும். அவ்விதமானால் திரைமறைவில் உள்நாட்டு பூசல்களைத் தூண்டி விடுதலை தவிர வேறு வழியே இல்லை. படைவிலகினால் தற்போதைய மாகாணசபை அரசாங்கம் நிலைத்து நிற்கமாட்டாது. இதற்கு மாற்று என்ன? இது மற்றைய நெருக்கடி.

* இலங்கையின் பொருளாதார சிக்கல்மிக்கதான நடவடிக்கையை தீர்க்கமுடியாத இந்தியாவின் பொருளாதார பலவீனத்திற்கு இராணுவ மேலாதிக்க பிரயோகமே தகுந்த மாற்று. ஆனால் இது உலக அரங்கில் நடுநிலையாளன், ஏகாதிபத்திய எதிர்ப்பாளன் என்ற 'முகமூடி பெயருக்கும், மதிப்பிற்கும் பங்கம் விளைவிக்கும். அவ்விதமானால் தீர்வு? இராணுவத்தை மீள எடுத்து திரைமறைவு நடவடிக்கை மாத்திரந்தானா? இது அடுத்த நெருக்கடி.

* சிங்கள பேரினவாதம் சிறிலங்கா அரசின் பிரிக்கமுடியாத ஒரு தன்மை. அதனை அழித்தொழிக்காமல் பேரினவாதத்தை கட்டுப்படுத்தவோ தவிக்கவோ முடியாது. இந்தியரசு சிறிலங்கா அரசை அழித்தொழிக்கும் நடவடிக்கையை எவ்விதத்திலும் செய்ய மாட்டாது. அதே நேரத்தில் சிங்கள பேரினவாதத்துடன் அதனால் ஒரு நிரந்தர இணக்கத்தை ஏற்படுத்தவும் முடியாது. இது தமிழர் மத்தியில் அவநம்பிக்கையின்மையை மேலும் வளர்க்கும். இந்த இரண்டுங்கெட்டான் நிலையின் காரணத்தால் இந்திய மத்திய அரசு இலங்கையின் அனைத்துப் பிரிவினரதும், அரசியல் அவநம்பிக்கைக்கு உள்ளாகும்.

* புலிகளின் எல்.டி.டி.இ யின் தேசியத்தன்மை, அதன் சர்வதேசிய தொடர்பின் தன்மை ஆகியவற்றின் காரணத்தால் இவர்களால் புலிகள் இயக்கத்தினரை அடக்கவும் முடியாது. அதனுடன் இணக்கம் காணவும் முடியாது. முடியாது என்பது இந்திய அரசின் இராணுவ பலம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதிலும் விட அதன் கொள்கை, அரசியல் தன்மை சம்பந்தப்பட்ட விடயம் என்று சொல்வதே பொருந்தும். இதன் காரணத்தால் இந்திய சார்பு இயக்கங்கள் காலப்போக்கில் இந்திய மத்தியரசுடன் வெளிப்படையாகவே முரண்பட வாய்ப்புகள் உண்டு.

* பிலிப்பைன்சில் உள்ள அமெரிக்கதளம் அப்புறப்படாது அது அங்கேயே தொடர்ந்து இருக்கவேண்டி ஏற்படலாம் அல்லது சிங்கப்பூரை நோக்கி இடம்பெயரலாம். அதேபோல் கம்பூசியா, ஆப்கானிஸ்தான் ஆகிய இருநாடுகளிலும் சோவியத் ரஷ்யா சார்பு ஆட்சி பலவீனப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. ஆப்கானிஸ்தான் ஒரு அமெரிக்க இராணுவ கூலியாக மாறுவது சாத்தியமே. இந்நிலைமைகளின் காரணத்தால் இந்துமகா சமுத்திரத்தில் அமெரிக்க இராணுவ செல்வாக்கு அதிகரிக்கும். இது தனது இராணுவத்தை இலங்கையில் இருந்து மீள அழைத்துக்கொள்வதில் இந்தியா தயக்கம் காட்டவேண்டிய ஒரு நிலையை தோற்றுவிக்கும். மெல்லவும் முடியாத, துப்பவும் முடியா ஒரு நிலை.

## இலங்கைப் பிரச்சனையில் அமெரிக்காவின் செயற்பாடுகளும், எதிர்பார்ப்புகளும்

* இந்திய இராணுவத்தை இலங்கை மண்ணில் வைத்து அவமானப்படுத்துவதும், இதன் மூலம் சிறிலங்கா அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் விரிசலைத் தோற்றுவிப்பதும் புலிகள் இந்திய அரசுக்கெதிரான ஒரு இராணுவமாக வளர்வதை ஊக்குவிப்பதும், தெற்காசிய பிராந்தியத்திலும் உலகின் ஏனைய பகுதி மக்கள் மத்தியிலும் இந்தியாவை ஒரு ஆக்கிரமிப்பு நாடு என்றும், இராணுவ ரீதியில் பலவீனமான நாடு என்றும் படம் பிடித்துக் காட்டுவதுமே அமெரிக்காவின் நோக்கமாய் உள்ளது. புலிகள் இயக்கத்தின் மீதும், சிறிலங்கா அரசின் மீதும், தனது செல்வாக்கை இவ்வழி நோக்கியே பிரயோகித்து வருகின்றது. இந்திய மத்தியரசின் உள்ளும் அமெரிக்கா செல்வாக்கு பெற்றுள்ளதும், அச்செல்வாக்கை இவ்வழி நோக்கியே செலுத்தி வருவதும் கண்கூடு. 1987 ஜூலையில் இருந்து இன்றுவரை இந்திய இராணுவம் புலிகளுக்கு எதிராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ் ஈழத்தவர்கள் எடுக்கவேண்டிய நிலைப்பாடு

நாம் இதுவரையும் அவதானித்த எமது பிராந்திய அரசியல் பின்னணியைக் கொண்டு, எமது நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை இனங்காண முற்படுவோம்.

சர்வதேச ரீதியாக எமது பிரதான எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியமாகும். இதன் பொருள் சோவியத் ரஷ்யா நண்பன் என்பதல்ல. எமது தேசத்தின் இன்றைய குழப்பகரமான நிலைமைக்கு அவர்களும் பங்கு வகிக்கின்றார்கள். ஏகாதிபத்தியங்களை எம்மால் தனித்து ஒழிக்க முடியாது. அது எம்மையும் உள்ளடக்கிய முழு உலகத்தவர்களின் பிரச்சனை. எமது தாய்பூமியில் அவர்களின் தலையீட்டையும், சதிகளையும் எதிர்த்து போராடுவது எமது முதலாவது கடமை.

பிராந்திய ரீதியான எதிரி, பிராந்திய மேலாதிக்கம் கொண்ட இந்திய மத்தியரசாகும், அதையும் எம்மால் தனித்து நின்று அழித்தொழிக்கமுடியாது. அது தென்காசிய பிராந்திய மக்கள் முழுவரினதும் குறிப்பாக இந்திய மக்களினது வரலாற்றுக் கடமையாகும். எமது தாயகத் தேசத்தில் இந்தியரசின் தலையீடுகளையும் சதிகளையும், மேலாதிக்கங்களையும் எதிர்ப்போம், மேலும் அதைச் செயலிழக்கச் செய்வதுமே எமது கடமையாகும். அதுவும் சிறிலங்காவில் உள்ள மக்களின் முழு ஒத்துழைப்புடன் செய்யப்பட வேண்டியது.

சிறிலங்கா அரசே எமது நாட்டு ரீதியான எதிரியாகும். இதையும் எம்மால் தனித்து நின்று எதிர்க்க முடியாது. இது இலங்கை மக்கள் முழுவதினதும் எதிரியாகும். எமது தாய் தேசத்தை அதனது பிடிக்குள் இருந்து விடுவிப்பதே எமது கடமையாகும். இது சிறிலங்கா அரசை பலவீனப்படுத்தும்.

தற்போதைய மாகாண அரசுதான் எமது உடனடி எதிரி என்பது தெரிந்த விசயமாக இருந்தாலும் கூட இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம் அல்லவா?

எமது தேச வரலாற்றை சற்று பின் நோக்கிப் பார்ப்போமானால், 1940களின் பிற்பகுதியில் இருந்து 1970களின் பிற்பகுதிவரை நாம் சிறிலங்கா அரசால் அடக்கப்பட்டோம். அதன் சதிகளுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாகியிருந்தோம்.

1970களின் பிற்பகுதியில் இருந்து 1980களின் நடுப்பகுதிவரை சிறிலங்கா அரசு, அமெரிக்க அரசின் ஒத்துழைப்புடன் எம்மை அடக்கியது. இவ்விரண்டுக்கும் எதிராகவே எமது போராட்டம் அமைந்திருந்தது.

1980களின் நடுப்பகுதியில் இருந்து இன்றுவரை சிறிலங்கா அரசு, அமெரிக்க அரசு, இந்திய மத்தியரசு ஆகிய மூவரினதும் அடக்கு முறைக்கு நாம் முகம்கொடுத்து வருகிறோம். எம் தேசத்தின் உள்முரண்பாடுகளை கூர்மைப்படுத்துவதில் எம் தேசத்து பொருளாதாரத்தை நாசமாக்குவதில், எம்மக்களைப் பயமுறுத்தி வைப்பதில் மூவரும் ஒன்று சேர்ந்தும் தனித்தனியாகவும் செயற்பட்டு வருகிறார்கள். பிராந்திய மேலாதிக்கப் போட்டிக்கான முரண்பாடு இவர்கள் மத்தியில் செயற்பட்டு வருதல் இவ்விதம் ஒரு உள்ளங்கை நெல்லிக்கனியாய் உள்ளதோ, அதேபோல் தமிழ் ஈழ தேசத்தை அடக்கும் முறைகளில் இவர்கள் சிற்சில இடங்களில் முரண்பட்டாலும் அடக்குவது என்னும் விசயத்தில் ஒன்றுபட்டேயுள்ளார்கள்.

சிறிலங்கா அரசு-அமெரிக்க அரசு கூட்டு ஒருபுறமும், இந்திய-மத்தியரசு மறுபுறமுமாக நின்று தமக்குள் முரண்பட்டு வருகிறார்கள். என்பது உண்மை. ஆனால் மேலாதிக்கத்திற்கும், இன அடக்குமுறைக்குமான போட்டியின் விளைவாக இந்த முரண்பாடு இதில் எந்த முகாமையும் முற்போக்கு முகாமாக்கி விடவில்லை. ஆகவே இதில் ஏதாவதொரு முகாமை ஆதரிக்கவேண்டும் என்பதுவோ, அதன் நலன்களுடன் இணைந்து நட்புறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதுவோ மிகத் தவறும், துரோகமும் தற்கொலையுமாகும்.

கவிதையுடன் 7ம் பக்கம் திருப்புக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதேபோல் இம்முரண்பாடுகளை பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்பதில்லை. இது ஒரு முகாம் சாரல் பிரச்சனையல்ல, மாறாக ஒரு இராஜதந்திரப் பிரச்சனையாகும். சிறிலங்கா அரசு இந்தியரசை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது, உண்மையே. ஆனால் ஒத்த தன்மையுள்ள – அடக்குமுறை சுடாவமுள்ள – இரு சக்திகள் ஒன்றையொன்று பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளும் எதிர் தன்மையுள்ள சக்திகள் ஒன்றையொன்று பயன்படுத்திக்கொள்வதற்குள்ள வாய்ப்புகளும் வேறுபட்டவை.

தமிழ் ஈழ தேசிய விடுதலைப்போராட்டம் இன்று முன்சொன்ன மூன்று எதிரிகளுக்கும் எதிரான ஒரு தேசிய யுத்தமாகும். இன்றைய நிலையில் மூன்று தேசத்திற்குமுரிய பொதுக்கோரிக்கைகள் முழக்கங்கள் முன்வைக்கப்படவேண்டும். இக்கோரிக்கைகளின் கீழ் வெகுஜன அணி திரட்டல் செய்யப்படவேண்டும்.

* அனைத்து வெளிநாட்டுப் படைகளும், ஆலோசகர்களும், உளவு நிறுவனங்களும் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும்.

* தமிழ் ஈழ தேசிய இயக்கங்கள் பரஸ்பர அழித்தொழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது நிறுத்தப்படவேண்டும். அவற்றின் இடையே ஒரு யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும்.

* தமிழ் ஈழ சுயநிர்ணய உரிமைக்கு வாய்ப்பாய் இருக்கக்கூடியதும், இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணக்கூடிய முறையிலும் அமைந்த அதிகாரங்களைக்கொண்ட மாகாணசபை அமைவிற்கு அனைத்து இயக்கங்களும் குரல் கொடுக்கவேண்டும்.

* இந்திய இராணுவ ஆதிக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபை கலைக்கப்பட்டு சுதந்திரமான அரசியற் சூழலில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலில் அனைத்து இயக்கங்களும் பங்கேற்கும் உரிமை உத்திரவாதப் படுத்தப்படவேண்டும். தேர்தல் பெறுபேறுகளை முரண்டுபிடிக்காது அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

* மாகாணசபை அமையப்பெற்ற மாகாண சபையின் படைப்பிரிவு, இலங்கை மத்தியரசின் படைப்பிரிவு ஆகியன அமைக்கப்பட்ட பின்னர் இவைதவிர அனைத்துவகை இராணுவமும், ஆயுதக் குழுக்களும் கலைக்கப்படவேண்டும்.

* அரசாங்க மட்டத்தில் இருந்து அனைத்து விவகாரங்களிலும் மக்கள் பங்குபெறக் கூடிய வகையிலான ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

* மாகாணசபையின் அரசியல்யாப்பு மூலம் மக்களின் அரசியல் தனித்துவத்தைப் பேணக்கூடியதாக அமையவேண்டும்.

* புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் ஆகியன தடையின்றி நடைபெறவேண்டும்.

* தமிழ்ஈழ மக்கள் தமது சுதந்திரம், ஜனநாயகம், சமூக பொருளாதார விடுதலை–க்கான போராட்டங்களை தொடர வேண்டும்.

<u>இவ்விதமானதொரு அரசாங்கமும், அதிகார பரவலாக்கமும், சமூக நிலைமையும் ஏற்படுவது சாத்தியமா?</u>

இவ்விதமான கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதே தற்போதைய சிக்கலான நிலைக்கு உடனடி தீர்வாக அமையும். ஆனால் அது இலகுவானதல்ல. தமிழ் ஈழத்தின் மூன்று எதிரிகளும் இவ்விதமான தீர்வை எளிதாக வழிவிட–மாட்டார்கள். இயக்க மோதல்களை தூண்டிவிடுவதன் மூலமும், பல்வேறுவிதமான பயங்கரவாதங்களையும் பல்வேறு வழிகளிலும் தூண்டிவிடுவதன் மூலமும், பேச்சுவார்த்தைகள் என்று காலத்தை இழுத்தடிப்பதன்மூலமும் இதற்கான வழிவகைகளைத் தடுக்கவும் மக்களைப் பயப்பிராந்தியத்தில் வைத்திருக்கவுமே முயற்சிப்பார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவர்களின் தடைகளையும் பயமுறுத்தல்களையும் கடந்து இவ்வித கோரிக்கைகள் மக்களின் பொதுக்கோரிக்கைகளாக மாறவேண்டும். மக்களின் ஏகோபித்த குரலாக மாறவேண்டும். இவ்வித கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறுவிதமான கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அது ஒரு பௌதீக சக்தியாக மாறவேண்டும். இச்சக்தி அனைத்து இயக்கங்களையும் சரியான வழிக்கு வந்துசேர உதவவேண்டும்.

மக்களின் எதிர்காலத்தில் நாட்டங்கொண்ட ஒவ்வொருவரும், அனைவரும் இவ்வித ஒரு மக்கள் சக்தியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவதொன்றுதான் மக்கள் முன்னால் உள்ள ஒரே வழியாகும். சிரமமான வழிதான் ஆனால் மாற்றுவழி வேறு இல்லை.

ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது என்பது போல் மக்கள் ஒரு சக்தியாக திரண்டுவரும்வரை தமிழ் ஈழ அரசியல் நிலைமை தேங்கி நிற்காது. இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் கோஷ்டி மோதலை தீவிரமாக தூண்டிவிடவே வல்லரசுகள் முயற்சிக்கும். இந்திய இராணுவ வெளியேற்றத்துடன் ஆரம்பித்து அது வெளியேறிய பின்னும் தொடரவுள்ள கோஷ்டி மோதல் மத்தியிலும் கூட மக்கள் இவ்வித கோரிக்கைகளை முன்வைத்துத்தமது நடவடிக்கைகளை தொடர வேண்டும். காலம் எடுத்தாலும் கூட மக்கள் கிளர்ச்சிகளின் மூலம் மாத்திரமே இதற்கோர் முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

---

## சிறிலங்கா அரசு– ஜே.வி.பி. மோதல்

பாராளுமன்ற ஜனநாயகம், தேர்தல் ஜனநாயகம் அரசியல் கட்சிகளின் ஜனநாயகம், நீதிமன்ற அமைப்பு முறையை அரசியல் விவகாரங்களுக்காக பயன்படுத்தும் ஜனநாயகம், அரசியல் விவகாரங்களிற்கு நடுநிலை அரசியல் கமிஷன்கள் அமைப்பதற்கான ஜனநாயகம் இத்தியாதி.... அரசியல் ஜனநாயகங்களை எவ்வித வினைத்திறனுமில்லாத வெற்றுப்பொம்மை உருவங்களாக மிகப் பத்திரமாகவும் ஆடம்பரமாகவும் வைத்துக்கொண்டு, பிரயோகிக்கப்படும் இராணுவ சர்வாதிகார–மானது நேரடி இராணுவ சர்வாதிகாரத்தை விட மிக ஆபத்தானது. தமிழீழத்தின் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் சிறிலங்கா அரசின் இந்த சர்வாதிகார அடக்கு முறைக்கு 1970களின் இறுதிப்பகுதியில் இருந்தே உட்பட்டு இருந்தார்கள். இதனால் அவர்களது போராட்டத்தின் ஆரம்பமே அரசு இயந்திரத்திற்கு எதிரானதாகவே இருந்தது. அரசுப்படைப் பிரிவினரே அதன் தாக்குதல் இலக்காக இருந்தது. ஆனாலும் கூட 1983 யூலையில் நடந்த இலங்கை இராணுவத்திற்கு எதிரான தாக்குதலின் பின்பே அவ்வாயுதப் போராட்டம் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரானதாக முனைப்புப் பெற்றது. ஆரம்பத்தில் அது "துரோகிகள்", "காட்டிக்கொடுப்போர்கள்" "பொலீஸ் ஒற்றர்கள்" அரச புலனாய்வுத் உத்தியோகத்தர்கள்" ஆகியோருக்கும் எதிரானதாகவே இருந்தது. ஆயுதப்போராட்ட இயக்கம் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கும் அவசியமான கருமங்களை செய்வதில் அரசின் ஒற்றர்களை பயமுறுத்துவதும், அழித்தொழிப்பதுமே பிரதான இராணுவ நடவடிக்கையாக இருந்தது. இவ்வித அழித்தொழிப்புக்கள் காட்டிக்கொடுப்போர்களை செயலிழக்க செய்வதும், மேலும் இவ்விதமானவர்கள் தோன்றாது இருப்பதையும் நோக்கமாக கொண்டது. தண்டனைகள் பயங்கரவாத தன்மை பெற்றதாகவும் இருந்தன. அரசியல் காரணங்க–ளுக்கான இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் யூ.என்.பி. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் அரசியற் பிரதிநிதிகளின் துரோகிகளாக கருதப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். இக்கட்சிகளின் செயற்பாட்டை தடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல் தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளாத இடதுசாரி இயக்கங்களைச் சார்ந்தவர்களுங்கூட துரோகிகளாகவே கருதப்பட்டார்கள். இக் காலக்கட்டத்தில் இயக்க அங்கத்தவர்கள் மக்கள் மத்தியில் தலைமறைவாகவும், இரகசியமாகவுமே இருந்தார்கள். இயக்கங்களைச் சார்ந்த நபர்கள் தம்மை இனங்காட்டிக்கொள்ளவில்லை. அண்மையில் தமிழ்நாட்டிலிருந்தபடியால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனங்கண்டு கொள்ளப்பட்டு விட்டவர்களும், காயப்பட்டுவிட்டவர்களும் தமிழ்நாட்டிற்கு சென்று விடுவது வழக்கமாய் இருந்தது. அத்துடன் விவசாய நடவடிக்கைக்காக காட்டை காட்டை அண்டிய பிரதேசங்களுக்குச் செல்வது வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஒரு வழமையாக இருந்ததினால் இவ்வித காரணங்கூறி கிராமத்தை விட்டு சில மாதங்களுக்கு வெளியேறி நிற்பது தம்மை இனங்காட்டிக்கொள்வதை தடுப்பதற்கு வாய்ப்பானதாக இருந்தது. நிதியைப்பொறுத்தவரையில் பெரும் அரசு நிறுவனங்களில் பணப்பறிப்பு மேற்கொள்வது, நிதி வளமுடைய தனியாரிடம் பணப்பறிப்பு செய்வதிலுமே தங்கியிருந்தார்கள்.

இராணுவத்திற்கு எதிராக நேரடி தாக்குதல் தொடுத்த ஆரம்பத்தில் இருந்து இவ்வியக்கங்களின் சமூக அந்தஸ்தில் மாற்றம் ஏற்படத்தொடங்கிவிட்டன. மக்கள் இவர்களைத் தமது நண்பர்களாக, பாதுகாவலர்களாக ஓரளவிற்கு அரசியல் தலைவர்களாகக்கூடிய ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். இவர்களின் இராணுவ சக்தியும் அதிகமாகியது. மக்களுக்கு தலைமறைவாக இருக்கும் நிலை மாற்றம் அடைந்தது. தம்மை மக்களுக்கு இனங்காட்டிக்கொண்டார்கள். வெளிப்படையானார்கள் எதிரிகள் கூட இயக்கத்தில் உள்ள கிராம மட்டத்தில் இருந்து தேசியமட்டம் வரையான பொறுப்பான நபர்களை தெரிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது. தாம் இருக்கும் இடங்களைத்தான் மறைத்துக்கொண்டார்களே தவிர தம்மை மறைக்கவில்லை. இந்தக் கட்டத்தில் மக்களுக்கும் இவர்களுக்கும் நல்லுறவே நிலவியது. மக்களைப்பயமுறுத்தும் விதத்திலான நடவடிக்கைகள் மிகக் குறைவானதாகவே இருந்தது.

இயக்கங்களுக்கிடையேயான முரண்பாடுகள் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தீர்க்கப்படும் கட்டம் வரும்வரை நிலைமை நன்றாகவே இருந்தது. அதன்பின் நிலைமை மாற்றம் அடைந்தது. அதாவது 1986 உடன் மீளவும் பயங்கரவாதம் நடமாடத் தொடங்கியது. (1986க்கு முன்னரும் இயக்க முரண்பாடுகள் தனிநபர் அழித்தொழிப்பாக இருந்தது. (உ.ம்) 82ல் புதியபாதை சுந்தரம், 83ல் ஒபரே தேவன்) ஜே.வி.பி யின் வளர்ச்சிப்போக்கை ஒப்பிடுவதற்கு 1986 வரையான தமிழ் போராளிகளின் தன்மையை மாத்திரமே தற்போது நோக்க முடியும்.

ஜே.வி.பி.யின் வளர்ச்சியையும், தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியையும், சமாந்திரமானதாகவோ, ஒத்த தன்மையுள்ளதாகவோ கருதமுடியாது. அவை இரண்டும் வெவ்வேறு அரசியல் சூழலில் வளர்ந்து வருகின்றன. ஆனாலும் இவற்றுக்கிடையே சில ஒற்றுமையும் காணப்படுகிறது.

தமிழீழ மக்கள் சிறிலங்கா அரசின் இராணுவ ஆட்சியை ஆயுதப்போராட்டம் ஆரம்பமானதற்கு முன்பேயே நேரில் இனங்கண்டுகொண்டுவிட்டார்கள். இவ் விளங்கல் ஜனநாயகமானதொரு விடயமாகவும் இருந்தது. இதனால் சிறிலங்கா அரசின் ஜனநாயக வேடங்களைக் கிழித்து அதன் உண்மை உருவை புட்டுக்காட்ட வேண்டிய அவசியம் தமிழீழ போராளிகளுக்கு பாரிய பிரச்சனையாக இருக்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அமைப்பு முறையின் அறிமுகத்துடனேயே அரசியல் ஜனநாயகமும் பறிக்கப்பட்டுவிட்டது. 1982ன் அபிப்பிராய வாக்கெடுப்பைத் தொடர்ந்து 1988 மார்கழியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் வரையான அனைத்து நிகழ்ச்சிகளும் இத் அரசியல் ஜனநாயகம் அற்றதாக நிராகரிக்கப்பட்ட நிலைமையை தோற்றுவித்தது. இலங்கை வரலாற்றில் அதிமுக்கிய விசயமான இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பான எந்தவொரு சிறு விடயமானாலும் சரி இலங்கை பாராளுமன்றத்திலோ இலங்கையின் அரசியல் கட்சிகளிலோ சம்பந்தமில்லாமலேயே நடைபெற்று வருகின்றது. ஜனாதிபதியை முன்னிறுத்தி அவரின் ஊடாக முப்படைகளும் இலங்கையை ஆளும் நிலையே நிலவுகின்றது. யூ.என்.பி.கட்சி கூட இன்று புறக்கணிக்கப்பட்டு விட்டது. தமிழீழ அரசியற் கட்சிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் அரசியல் நடைப் பிணங்களாகப்பட்டுள்ளன. சிறிலங்கா இராணுவ சர்வாதிகாரத்தை அலங்கரிக்கும் "ஜனநாயக" சோடனைகளின் அங்கங்களாக மாறியுள்ளார்கள். தமது சொந்த போராட்டத்தின்மூலம் படிப்பினைகள் பெற்ற இலங்கை தொழிலாளிவர்க்கத்தின் ஓர் சிறு பகுதியினரும், சிறுமுதலாளித்துவ புத்தி ஜீவிகளில் பெரும் பகுதியினரைத் தவிர பெரும்பான்மையான சிங்கள மக்கள் சிறிலங்கா அரசின் உண்மைத் தோற்றத்தை இன்னமும் புரிந்துகொள்ளவில்லை. அதன் "ஜனநாயக" சோடனைகளில் மயக்கம் கொண்டவர்களாகவே உள்ளார்கள். முது-

கனிவுடன் பக்கம் 1. ஐ திருப்புக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கெளும்பில்லாத எதிர்கட்சிகளின் செயற்பாடுகளும், சிறிலங்கா அரசால் மிகத் தாராளமாகவே அள்ளிச் சொரியப்படும் சிங்கள பேரினவாத போர்பிரகடனங்களும் ஒரு நலன்புரி அரசாக தன்னை வைத்துக்கொள்வதற்கான அதனது முயற்சிகளுமே இதற்கான காரணங்களாகும். இதனால் தமிழீழப் போராளிகள் முகங்கொடுத்த பிரச்சனைகளிலும் விட ஜே.வி.பி. இயக்கத்தினர் ஒரு வேறுபட்ட பிரச்சனைக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு சிறிலங்கா அரசின் உண்மைச் சொரூபத்தை துரித கெதியில் புரிய வைப்பதே அதுவாகும். படைப்பிரிவினரின் கோபத்தை தூண்டி விடக்கூடிய விதத்திலான இவர்களது நடவடிக்கை இதையே எடுத்துக்காட்டுகிறது. இதில் இவர்கள் வெற்றியும் பெற்று வருகிறார்கள் என்றே சொல்லவேண்டும். வெற்று டப்பாகிவிட்ட . . . . போலியாகிப்போன ஜனநாயகத்தின் அரசியல் எல்லைகளுக்கும், நலன்புரி(welfare promises ) வாக்குறுதி என்ற வட்டத்திற்குள்ளும் நின்று சுற்றிச் சுழன்று கொண்டிருந்த சிங்கள மக்களின் அரசியல் அவதானமானது இன்று சிறிலங்கா அரசின் தன்மை தொடர்புபட்ட விவகாரத்துள் பிரவேசித்துள்ளதை காணமுடிகிறதல்லவா? சுருக்கமாக சொன்னால் சிறிலங்கா இராணுவ அரசின் ஜனநாயக சோடனைகளைச் சிதைத்தெறிவதற்கான இராணுவ நடவடிக்கைகளும் ஜே.வி.பி யின் ஒரு கடமையாகியுள்ளது.. சிறிலங்கா அரசைப்பொறுத்து இவ்வித நடவடிக்கையில் ஈடுபட வேண்டியதொரு அவசியம் தமிழ் போராளிகளுக்கு இருக்கவில்லை. ( ஆனால் இந்திய சமாதான படையைப் பொறுத்து புலிகள் இயக்கத்தினர் (எல்.டி.டி.இ) இவ்விதமானதொரு நடவடிக்கையில் ஈடு-பட்டார்கள். 1987ன் இறுதிப்பகுதியில் தோல்வி நிச்சயம் என்று தெரிந்தும் அவர்கள் மேற்கொண்ட தடுப்பு யுத்தத்தின் (war of Resistance . . . ) நோக்கம் இந்தியப்படையின் முகமூடியை கிழிப்பதுதான் என அவர்கள் பல தடவைகளில் கூறி-யிருப்பதை இங்கு நினைவு கூறல் பொருத்தமானது.)

ஆனால் இந்த இலக்கை எய்துவதற்காக ஜே.வி.பியினர் மேற்கொள்ளும் தந்தி-ரோபாயங்கள் அனைத்துமே சரியானவைதானென்பது விவாதத்திற்குரியவை. நிராயுதபாணியான மக்களை துப்பாக்கி முனையில் நிர்ப்பந்தித்து ஆயுதபாணியான இராணுவத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ய வைத்தல், வைத்திய சேவையில் பாதிப்புக்கு தமது நடவடிக்கையே காரணமாய் இருக்கக் கூடிய முறையில் நடந்து கொள்ளல், படையினரின் தனிப்பட்ட கோபத்தைத் தூண்டக்கூடிய முறையில் நடந்து கொள்ளல் (அவர்களின் குடும்ப அங்கத்தினரை கொல்லல்) போன்றவை தமது தலைக்குத்தாமே, மண் அள்ளிக்கொட்டும் தந்திரோபாயங்கள் ஆகமாட்டாதா?

மற்றையது இதுவரை கால நடவடிக்கைகளை நோக்கும்போது ஜே.வி.பின் நடவடிக்கைகள் தமிழ் போராளிகளினது நடவடிக்கைகளிலும் விட பயங்கரமானதாக இருக்கின்றதை காணக்கூடியதாய் உள்ளது. தமிழீழப் போராளிகள் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விடுதலை உணர்வுகளின் ஊடாக தம்மை வளர்த்துக்கொண்டார்கள். இது அவர்களுக்கு சாதகமானதொரு அரசியல் பின்னணியாக இருந்தது. ஆனால் ஜே.வி.பி யின் நிலைமையோ வேறு விதமானது. சிறிலங்கா அரசின் இராணுவ அதிகாரத்திற்கு எதிராக சிங்கள மக்கள் நடத்த வேண்டிய போராட்டம். ஒரு வர்க்கப் போராட்டமேயாகும். உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரம், சோசலிசப்பொருளாதாரம், இன சமத்துவம், தேசிய, சுதந்திரம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட ஒரு போராட்டமாகும். இவ்வித வேலைத்திட்டங்களுடன் தொடர்பு படாத ஒரு போராட்டத்திற்கு சிங்கள மக்கள் தமது ஆதரவைக் கொடுப்பது மிகச் சிரமமானதே. இதை தமது சொந்த போராட்டமாக கருதுவது சாத்தியமில்லாததேயாகும். சிறு முதலாளித்துவ குணாம்சங்களைக்கொண்ட புத்தி ஜீவிகளின் மேலாதிக்கத்திற்குட்பட்ட இயக்கமான ஜே.வி.பி. தனது வர்க்க சுபாவத்தின் காரணத்தால் சிங்கள உழைக்கும் மக்களை வர்க்கப் போராட்டத்திற்கு அணி திரட்டும் ஆற்றல் அற்றதாகவே உள்ளது. இது இயற்கையானதே சிறிலங்கா இராணுவ ஆட்சிக்கெதிரான போராட்டத்தை ஒருஅரசியல் ஜனநாயக சீர் திருத்தங்களுக்கான போராட்டமாகவும் தேசிய சுதந்திரத்திற்கான போராட்டமாக-வும் வளர்ப்பது என்ற எல்லைக்கப்பால் ஜே.வி.பி யால் செல்ல முடியாதுள்ளது. தேசிய சுதந்திரத்திற்கான கோசத்தை அது இன்றைய உடனடிப் பிரச்சனையான இந்தியப்படை வெளியேற்றத்துடன் இணைத்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச்சுவடுகள்

பக்கம் 11 ஐ திருப்புக

www.tamilarangam.net

அரசியல் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை சுதந்திர தேர்தல் என்ற மட்டத்திற்கப்பால் எடுத்தும் சொல்லமுடியாதுள்ளது. இந்நிலைமைகளின் காரணத்தால் ஜே.வி.பி. யானது சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் ஒரு மந்தகரமான வளர்ச்சியையே காண்கிறது. இந்த நிலையில் மக்களை அச்சத்துக்குள்ளாக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுப்பதை தவிர வேறுமாற்று வழி எதையும் அதனால் கண்டு பிடிக்க முடியா நிலையேயுள்ளது.

இதனது கோரிக்கைகள் உழைக்கும் மக்களின் செயற்பாட்டை முன் கொண்டு வருதலுக்கு உகந்ததாக இல்லாதது இவர்களின் ஆயுதக் கிளர்ச்சியால் பயன் பெறத் தக்கதாகவும் உள்ளது. ஜே.வி.பி. யினரின் போராட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகள் குளிர்காய்கின்றனர். தனது கோரிக்கைகளை முதலாளித்துவவாதிகள் பயன்படுத்திக்கொள்ள முடியாத தொன்றாக முன்வைக்கும் தகமையற்ற ஜே.வி.பி.யினர் ஏனையவர்கள் தம்மை பயன்படுத்திக் கொள்வதை தடுப்பதற்கு, அவர்களுக்கும் எதிராக பயங்கரவாதத்தை பயன்படுத்த நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

அடுத்த புறத்தில் ஜே.வி.பி.யினர் தாம் மக்களின் அனைத்துப் பகுதியினரையும் அணிதிரட்டி போராட வேண்டிய தலைவர்கள் என்று தம்மை எண்ணவில்லை. தாம் தனித்து நிற்பதாகவும் வேறு எவரிலும் தாம் நம்பிக்கை வைக்க முடியாது என்றுமே கருதுகிறார்கள். சிங்கள சிறுமுதலாளித்துவ புத்தி ஜீவிகள் மாத்திரமே இவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்கள் தமிழ் மக்களையோ, முஸ்லீம் மக்களையோ இவர்கள் அஞ்சுகிறார்கள். அது இந்திய தலையீட்டுக்கு நுழைவாயிலாக மாறிவிடுமோ என்று பயங்கொள்கிறார்கள் இதனால் அதிகார பரவலாக்களை எதிர்க்கிறார்கள். இதன் மூலம் அரசியல் ரீதியில் பேரினவாதிகளுடன் தம்மை இனங்காட்டிக் கொள்கிறார்கள். தேசிய இனங்களின் அரசியல் சமத்துவத்தைக் கோரும் சிங்களவர்களும் இவர்களின் பார்வைக்கு தேச துரோகிகளாகவே தென்படுகிறார்கள் வெகுஜனங்களை பயப்பிராந்தியத்தில் வைத்திருக்க வேண்டிய ஒரு நிலைக்கு இதுவும் ஒரு காரணம் இது இவ்விதமிருக்க நடைமுறையில் தாம் தமிழர்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதை நிரூபிக்க இனவெறி நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை கொலை செய்யவும் இனி ஈடுபடாதிருக்க பயமுறுத்தவும் வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஜே.வி.பி.யினர் வர்க்க பிரச்சனைகளிலும், தேசிய இனச் சிக்கலிலும் அரசியல் அதிகாரம் எந்த வர்க்கத்தின் கைகளில் இருக்க வேண்டும் என்பதிலும் சரியான ஒரு நிலைப்பாட்டிற்கு இன்னமும் வலவில்லை. இதனால் இவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளிலும் மக்களை கட்டாயப்படுத்தி கிளர்ச்சி செய்விக்கும் நடவடிக்கைகளிலும் தொடர்ந்தும் ஈடுபட வேண்டிய ஒரு நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளனர். சிங்கள மக்கள் சிறிலங்க அரசின் ஜனநாயக சோடனைகளை இனங்கண்டு கொள்வதிலும் நலன்புரிசெயற்பாடுகளின் நச்சுத்தன்மையை புரிந்து கொள்வதிலும் இன்னமும் அரசியல் வளர்ச்சி பெற்றில்லாத நிலமை ஜே.வி.பி. யின் சொந்த பலவீனத்தால் ஏற்பட்ட சிக்கலை மேலும் வளர்த்துள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் தமிழீழ மக்களை அரசியல் மயப்படுத்துவதில் மிகச் சரியாகச் செயற்பட்டார்கள் என்பதில்லை ஆனாதல் 1987 வரையிலான தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் அவர்களின் முரணற்ற அரசியல் கொள்கையின் காரணத்தாலும், அவர்களுக்கிருந்த வாய்ப்புக்களின் காரணத்தாலும் மக்களை அரசியல் மயப்படுத்துவதில் கணிசமான அளவு வெற்றியீட்டினார்கள் என்றே கூறவேண்டும். ஆனால் ஜே.வி.பி. யினர் இது விடயத்தில் மிகவும் பலவீனமாகவே உள்ளனர். இதற்கான வாய்ப்புக்களும் ஜே.வி.பிக்கு மிக குறைவுதான், கிடைக்கும் வாய்ப்பைக் கூட சரியாகப் பயன்படுத்தவில்லை. அவர்களின் முன்பின் முரணான அரசியல் கொள்கைகளும் தமது குழுவை அனைத்துக்கும் மேலாக முன் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற அவர்களது பேரவாவுமே இத்தவறுக்கான காரணங்களாக உள்ளன.

அரசியல் மயப்படுத்தல் என்பது இராணுவத்தின் சுயரூபத்தை இராணுவ நடவடிக்கையின் மூலம் அம்பலப்படுத்தல் என்பது மாத்திரமல்ல, அதுவும் மிக முக்கியமானதொன்றுதான், மறுக்கமுடியாது. அதே நேரத்தில் மக்களுடன் பல்வேறு வழிகளிலும் அரசியல் தொடர்புகள் வைத்திருத்தல் அடுத்த ஒரு வழிவகையாகும். மக்கள் முன்னால் வெளிப்பட்டு வரக் கூடிய ஒரு நிலமை சிருஷ்டிக்கப்படும் போதே இதை மிகத் திறம்பட செய்யமுடியும் என்பது உண்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருமுன்பு ஆயுதப் போராட்டத்தை நிராகரித்து யு.என்.பி.யுடன் ஒரு இணைவுக்கா முயற்சித்துக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அரசியல் அமைப்புக்கள் பல்வேறு வகைப்பட்ட மனிதாபிமான குழுக்கள், ஜனநாயகக் குழுக்கள் ~~பல்வேறு-வகைப்பட்ட-மனிதாபிமான-குழுக்கள்~~ ஆகியவற்றின் மூலம் இவ்வித காரியங்களை செய்துவந்தார்கள். இவை மாத்திரம் அரசியல் மயப்படுத்தலாகி விட மாட்டாது.

எதிரி இடையிடையே மக்களைத் திசை திருப்ப மேற்கொள்ளும் அரசியற் தந்திரோபாயங்களை அம்பலப்படுத்துவதற்கு எதிரியுடனான பேச்சு வார்த்தைகளும் உடன்படிக்கைகளும் போராளிகளுக்கு அவசியம். இது எதிரியை அரசியல் முறையில் அம்பலப்படுத்த இராஜ தந்திரத் துறையில் நடைபெறும் அரசியல் யுத்தமாகும். தமிழீழப் போராளிகள் இவ்விதமான பல யுத்தத்தை நடத்தியுள்ளார்கள். பல யுத்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். பல்வேறு வகைப்பட்ட தேர்தல்கள், வட்டமேசை மாநாடு, திம்பு பேச்சுவார்த்தை போன்ற பேச்சுவார்த்தைகள், யுத்த நிறுத்தங்கள் போன்றவை இதற்கு சில உதாரணங்களாகும். இவைகள் மிகச் சிறந்த அரசியற் பாடசாலைகள், இராணுவ தாக்குதல்கள்; அரசியற் போதனையூட்டல்கள் பேச்சுவார்த்தைகள் இவை மூன்றும் இணைந்து தான் மிகச்சிரியான அரசியல் மயப்படுத்தலாக இருக்க முடியும். இராணுவ தாக்குதலில் ஜே.வி.பியினர் ^ திருத்திக் கொண்டே ஆகவேண்டும்.

இவ்வளவு தவறுகள் மத்தியிலும் ஜே.வி.பி இயக்கத்தினர் வளர்ந்தே வருகிறார்கள். இதுவரையான வரலாற்றை நோக்கும் போது அவர்கள் வளர்ந்துள்ளார்கள் என்பது உண்மை. இவர்களின் தவறுகள் குறைவாக இருப்பதுவோ அல்லது பொருட்படுத்த முடியாது இருப்பதுவோ தான் இதற்கான காரணங்களல்ல இவர்களின் பல தவறுகள் இவர்களின் நண்பர்களையே அழித்து வருகின்றன. சிறிலங்கா அரசு தன்னைப் பயங்கரவாதத்திற்கு எதிரான அரசாக காட்டிக் கொள்ளவும் இராணுவ ரீதியில் மக்கள் ^ ஜே.வி.பி.யினரின் ^ பிரதான தாக்குதல் இலக்குகள் சிறிலங்கா அரசின் இராணுவ அதிகாரமாகவும், இந்திய இராணுவத்தின் இருத்தலாகவும் இருப்பதுவே இவ்வளவு சொந்த தவறுகள் மத்தியிலும் ஜே.வி.பி வளர்ந்து வருவதற்கான காரணமாகும்.

ஜே.வி.பி.யினரின் சமீபத்திய இராணுவ நடிவடிக்கைகள் சிறிலங்கா இராணுவத்தை மிகவும் தூண்டிவிட்டுள்ளது. அதன் காட்டுமிராண்டித் தன்மையை வெளிக் கொணர்ந்துள்ளது. அது சிங்கள மக்களுக்கு எதிராக குறிப்பாக மாணவர்களுக்கு எதிராக தனது நரமாமிச தாக்குதலைத் தொடுத்துள்ளது. இத் தாக்குதலின் விளைவுகள் எவ்வாகும்? சிங்கள மக்களை அச்சத்துக்குள்ளாக்கி சிறிலங்கா அரசிடம் கண்ணை மூடி அடிபணியும் நிலைக்கு இட்டுச் சொல்லுமா? அல்லது எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் நிலைக்குத் தள்ளி விடுமா? இது ஒரு பெரும் கேள்விக் குறி. எவ்விதம் பதில் பகன்வது. தமிழ் ஈழத்தின் சில அனுபவங்களைத் தான் இங்கு நோக்க வேண்டியுள்ளது.

தமிழீழப் போராளிகளின் இராணுவ நடவடிக்கைகள் சிறிலங்கா இராணுவத்தையும், அரசையும் இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பலவீனப் படுத்தி வந்தன. சிறிலங்கா இராணுவத்தை போராளிகள் முகாம்களுக்குள் முடக்கிவிட்டார்கள், சர்வதேச ரீதியில் சிறிலங்கா அரசை நன்றாக அம்பலப் படுத்தி, தனிமைப்படுத்தி வந்தார்கள் எப்பவற்றை உணர்ந்ததன் காரணத்தால்

www.tamilarangam.net

தான் தமிழீழ மக்கள் சிறிலங்கா இராணுவத்தின் கசாப்புக் கடைகாரதனத்திற்கு
அடிபலி மறுத்தவர்தார்கள். இழப்புக்களை தாங்கிக் கொள்ளும் மனோ
நிலையில் இருந்தார்கள். ஆகவே இராணுவத்தை தூண்டிவிட்டு கோபப்படுத்தினால்
மட்டும் போதாது, சிறிலங்கா அரசு அனைத்து வழிகளிலும் பலயீனப்படுகிறது
என்பது அனைத்து சிங்கள மக்களுக்கும் கண் கூடாக காணக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக
நடைபெறவும் வேண்டும். இவ்விடம் நடைபெறுவதாக இன்னமும் தெரியவில்லை
அரசாங்கம் தனது தோல்விகளை ஈடுசெய்யக்கூடிய விதத்தில் அல்லது அதை மூடி
மறைக்க கூடிய விதத்திலேயே இன்னமும் உள்ளது. ஆகவே அது 1971 களின்
போல் முண்டும் ஜே.வி.பி. அடக்கப்படுமா? மக்கள் மத்தியில் இருந்து தனிமைப்
படுத்தப்படுமா? என்பது இன்னமும் நிச்சயமாகவில்லை. 1971 களில் சிறிலங்க
இராணுவத்தின் சுயரூபம் வெளிவந்தது தான். ஆனால் மக்கள் அதை கண்டு
பயந்து அதனுடன் இணைந்து ஜே.வி.வி. யை காட்டி கொடுத்தார்களே தவிர,
இனங்கண்டு கொண்ட இராணுவத்திற்கு எதிராக தொடர்ந்து போராட முன்
வரவில்லை.

இராணுவத்தை எதிர் கொண்டு அதைத் தூண்டிவிடும் இயக்கம், இவ்வாறு
தூண்டி விடப்படும் இராணுவம், அரசியல் முறையிலோ, இராணுவ முறையிலோ
தோல்வியை தேடிக்கொள்வதற்கான தயாரிப்புகளைக் கொண்டதாக இருக்க
வேண்டும். இல்லையேல் இழப்பு பிற்போக்கு இராணுவத்திற்கல்ல மக்களுக்குத்தான்

--அ. இரமணன்.

_*:*:*:*:*:*:*:*:*:*:*_

யுத்த வெறி எஜமானர்களே!
துப்பாக்கிகளையும்
சாவு விமானங்களையும்
பெருங் குண்டுகளையும்
கட்டியமைத்து விட்டு
சுவர்களுக்குப் பின்னால்
மேஜைகளுக்குப் பின்னால்
ஒளிந்து கொண்டவர்களே!
உங்கள் காதுகளுக்கு எட்டுமாறு சொல்லிக் கொள்வேன்!
முகமூடிகளினூடே
உங்களை
நான். அடையாளம் கண்டு விட்டேன்!

— வியட்நாமில் அமெரிக்க இராணுவ
ஆக்கிரமிப்பை எதிர்த்து அமெரிக்கப்
பாடகர் பாப் டைலன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொல்லாமல் போன புதல்வனுக்கு.......

என் மகன்
பூஞ்சிறகு முளைந்த சிட்டுக்குருவியாய்
பறந்து போனான்

இடி முழங்கி வான் அதிரும்
மழைக்காலக் குளிர் இரவில்
அருகிருந்து தென்றல்
சுமந்து வரும் மெல்லிசை
கேட்டிருக்கும் என்மகன்

முழுநிலவு பூத்து
நட்சத்திரம் தெறித்திருக்கும் இரவுகளில்
மஞ்சளாய் கனல்
பூத்து விரிந்திருக்கும் எம் வயலில்
காற்று வாங்கியபடி
அவனும் நானும் தனித்திருக்கையில்
ஒருநாள் அவன் கேட்டான் ;

அப்பா ஏன் இறந்தார் ?
யுத்தம் ஏன் வருகிறது ?
அக்காவுக்கு ஏன் தலை நரைத்து விட்டது ?

அன்று சின்னப்பயல் அவன்
மகனே !
ஆந்தைகள் அலறும் இரவுகளும்
விமானங்கள் குண்டு வீச்சும்
நெஞ்சை பிளக்கும் அவல மரணங்களும்
இங்கு நிறையவே நடக்கும்
காலம் முழுவதும் உன்வரவை பார்த்து
சோர்ந்து படுத்துவிட்டேன்
ஏதோ இனம் புரியாத சோகம்
நெஞ்சை அரிக்கிறது

ஆனாலும் பார் மகனே !
எங்கோ தொலைவில்
நீ என்ன செய்வாய் என்பதும்
நீ நடக்கும் பாதையும்
நான் அறிவேன்.

இராணுவ வெறியரிடம் அகப்படாதே !
கவனம் அதிகம் தேவை.
அதைவிட மேலாக எமக்குள் நூறு எதிரிகள்
மக்களை நேசித்த
சின்ன பயல்களெல்லாம்
இன்று மண்ணுக்குள்

மகனே !
சிட்டுக்குருவி போலத்தான் பறந்தாய் !
ஆயினும்
காலம் உன்னை வளர்த்து இருக்கும்
மனித நேயத்தை இழந்து விடாதே
மக்களை அதிகம் நேசிக்க பழகு

ஔவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யார் இந்த கொரில்லா என்கிறீர்களா?

மக்களை நேசித்து மக்களுள் ஒருவராக வாழ்ந்து மக்களை அணிதிரட்டி மக்களுக்கு வழிகாட்டுவதற்கு பதில் ஆயுதங்களோ எல்லாவற்றையும் சாதிக்கும் என நினைத்து விதவிதமான ஆயுதங்கள் தாங்கிய சுய விளம்பரங்கள் மூலமும் கண்மூடித்தனமான ஆயுதபலம் கொண்ட அராஜக செயல்கள் மூலமும் தனிநபர் ஆதிக்கமும், அதிகாரமும், சமூகத்தில் பெற்றுவிட்ட பின் தேசத்தின் விடுதலைக்கு தடைக்கல்லாக மாறிவிடும் வரலாற்று துரோகிகளில் இவனும் ஒருவன்

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் உள்ள சிலஇயக்கத் தலைவர்கள் உங்கள் மனக்கண்ணின்முன் தெரிவதுபோல் இருக்கிறதா? பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடமான இன்றைய இந்தியாவில் 'இந்தி' இனவாத மத்தியரசின் தேசிய இன அடக்குமுறையை எதிர்த்து தொடர்ந்து போராடி வரும் நாகாலாந்து மக்களின் தேசியப்போராட்டத்தில் 20 வருடங்களுக்குமுன் ஷிகேடோ நாகாலாந்து புரட்சி இயக்கத்தில் கொரில்லா அணி கமாண்டராக இருந்த ஜுகேதோ என்ற இவன் 1972-ம் ஆண்டு 1500 போராளிகளுடன் 'இந்தி' மத்தியரசிடம் சரணடைந்து ஆயுதங்களை ஒப்படைத்தான். இந்த ஜுகேதோ நாகாலாந்து தேசிய இனவிடுதலை போருக்கு துரோகம் இழைத்ததுடன் விட்டுவிடவில்லை போராட்டஏற்ற இறக்க அனுபவங்களூடாக வளர்ந்து போராடும் இன்றைய புரட்சிகர தேசபக்த நாகாலாந்து கொரில்லா போராளிகளை வேட்டையாடும் மத்தியரசின் எல்லைக்காவல் படையின் கமாண்டராக தேசியஇன அடக்குமுறையின் அரசு இயந்திர காவல் நாயாக உள்ளான்.

இலங்கையில் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போரில் ஏற்பட்டுள்ள அரசியல் இராணுவ மாற்றங்களும் 1987 உடன் ஒரு தசாப்தத்தை முடித்துக்கொண்டுள்ள சிறுமுதலாளிய இயக்கங்களின் செயற்பாட்டில் ஏற்பட்டுவரும் அதிகார போட்டிக்கான முகாம்சாரும் மாறுதல்களும், அரசுக்கு எதிரான கொரில்லா தளபதிகள் என்ற அவர்களின் நிலையைமாற்றி தமிழீழ மக்களின் உண்மையான தேசிய விடுதலைக்காக போராடும் புரட்சிகர தேசபக்தர்களை பூண்டோடு அழிக்கும் ஜுகேதோக்களை உருவாக்கி வருகிறது.

மக்களை சார்ந்து மக்களையும் ஆயுபாணியாக்கி போராடும் தேசபக்தர்கள் இனவாத அரசுகளையும் ஜுகேதோக்களையும் இறுதி வெற்றிவரை எதிர்த்து போரிடும் வல்லமையை பெறுவார்கள்.

**"தலைவர் வருவார்கள் - போவார்கள் ஆனால்**
**மக்கள் என்றும் இருப்பவர்கள், மக்கள்தான் சரித்திரம்**
**படைக்கின்றனர், மக்கள் சக்தியை எந்த சக்தியாலும் அழிக்கமுடியாது."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்